10/11/1951 M.Y.M BANGALORE

போர்வாள்

வாள் 5 வீச்சு 10
10-11-51 சனிக்கிழமை
ஆசிரியர்கள்:
காஞ்சி. மணிமொழியார்
மா. இளஞ்செழியன் B.A.Hons
துணை ஆசிரியர்:
காஞ்சி. கல்யாணசுந்தரம்
விலை 2 அணா

அமெரிக்க மாது—அற்புதப் பாதை!

விஞ்ஞான சகாப்தத்தில் அஞ்ஞானக் காட்சிகள்!

ஆட்சிப் பீடமா? பஜனைக் கூடமா?

பூஜாரிப் போக்கு கூடாது இனியும்!

★

"என்னதான் இருந்தாலும் ஒரு பெண்ணின் புத்தி இப்படியா கெட்டுப்போக வேண்டும்? மானம் ஈனம், வெட்கம் ரோஷம், சூடு [illegible] சொரணை, துளியளவும் [illegible] இவளிடம்?"

"இழுத்துக்கொண்டு போய்ச் சிறையில் அடைத்துச் சித்திரவதை செய்யவேண்டும் இந்தச் சண்டாளியை! எவ்வளவு தைரியம் இருந்தால், இத்தனை பேர் முன்னிலையில், இவ்வளவு பட்டப்பகலில், இந்தப் பொல்லாங்கான காரியத்தைப்புரிந்திருப்பாள் இந்தப் பழிகாரி!"

"இந்த மானங்கெட்ட மங்கையின் செயலால் இந்த ஊருக்கே அல்லவா பெரிய அவமானம் ஏற்பட்டுவிட்டது! விட்டுவைக்கக்கூடாது இவளை! உடனே உதைத்து விரட்டவேண்டும் ஊரைவிட்டு!"

"கிளர்ச்சி புரிய வந்து விட்டாளாம் கிளர்ச்சி! கிளர்ச்சி புரிகிற அழகைப் பாரு அழகை! வெட்கம் கெட்ட சிறுக்கி!"

"நாகரிகப் பண்பு நிறைந்த நம்ம நாட்டிலே பிறந்திருக்கிறானே இப் [illegible] என்பதை எண்ணிப் பார்க்கும்போதுதான் நமக்கு வெட்கம் தாங்கமுடியவில்லை. என்ன செய்வது? இந்த வெட்கக்கேட்டையும் சகித்துக்கொண்டிருக்கவேண்டியது நம்முடைய தலைவிதிபோலிருக்கிறது!"

"தலைவிதியாவது—கால் விதியாவது! கண்ட கண்ட இடத்திலே அவளை இனி நாம் காரித் துப்ப வேண்டும்! சதிகாரி—பழிகாரி—சண்டாளி என்று அவளை நாம் ஏசிப்பேசி வெறுக்கவேண்டும்! அப்போதுதான் அவளுக்குப் புத்தி வரும்!"

"ஆமாமப்பா, அதுதான் சரி! அவள் தலையைக் கண்டாலே மக்கள் ஏசவேண்டும்! அவள் முகத்தைப் பார்த்ததும், மக்கள், [illegible] பேயோ பிசாசோ கண்டது போல வெறுத்து ஒதுக்கவேண்டும்! யாரும் தீண்டாத திருமேனியாக ஒதுக்கி வைக்கவேண்டும் அவளை!"

"நாம் கூறித்தானா நாடு செய்யப் [illegible] காரியத்தை! போகிறது அந்தக் காரியத்தை! இயற்கையாகவே இனி அதுதான் நடக்கப்போகிறது! சந்தேகமென்ன இருக்கிறது அதிலே!"

"சந்தேகம் எதுவும் இல்லை—இருக்கவும் கூடாது. அந்தக் காரியம்தான் இனி நடக்கவேண்டும்—நடப்பதுதான் முறை."

அமெரிக்க நாட்டைச் சேர்ந்த நியூயார்க் நகரத்திலே, அக்டோபர் மாத இறுதியில், ஓர் நாள், மேலே குறிப்பிட்ட உரையாடல்தான், வீதிதோறும், வீடுதோறும் நிகழலாயிற்று.

அன்று, அந்த நகரவாசிகள் அத்தனைபேருமே, [illegible] என்னும் பெயர் படைத்த பெண்

(4-ம் பக்கம் பார்க்க)

விவாக விடுதலைப் போர்!

[தில்லை. அறிவழகன்]

'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே ஆனந்த சுதந்தரம் அடைந்து விட்டோ'மென்று பாடி அதற்கேற்ப கால்வலிக்குமளவு ஆடிக்களித்துமிண்ட நாட்களாகிவிட்டன. 'விடுதலை விடுதலை அனைவர்க்கும் விடுதலை' என்று முழங்காத திக்குஇல்லை. இந்த 'இதய கீத'த்தைப் பேச்சு மேடைகளில் மாத்திரமல்ல, நாடக மேடைகளிலும் சினிமாக்களிலும் கேட்டுக் கைவலிக்குமளவு பற்பல தடவை கை தட்டியுமாகிவிட்டது.

ஆனால் பாட்டிலே உள்ளதை நாட்டிலே காண முடியவில்லை என்பது மாத்திரமல்ல அதன் எதிர் நிலையையே காண்கிறோம்!

மகிழ்ச்சிச் சந்தையில் நாமே போற்றி வாங்கும் புதுமுறைப் பண்டங்களை வாழ்க்கைப்பாதையில் எடுத்துச் செல்லக் கூட அஞ்சுகிறோம். ஆகவே தான் சிரித்துக் களிக்குமளவு மட்டுமே இச் சொற்கள் உபயோகிக்கப்படுகின்றன, ஆறாத உளைச் சேற்றில் ஏறாத ஆழத்தில் அமுங்கிக் கிடக்கும் இச்சமுதாயத்தில்!

ஆம் இந் நிலையில் 'மணம்'!

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் இந்த மணப் பேச்சு பத்திரிகைகளில் அடிபடுகிறது. எது மணம்? எப்படியிருக்கவேண்டும் மணம்? என்ற இந்தக் கேள்விகளை, கதாசிரியர்கள், கட்டுரையாளர்கள், நாவலர்கள், பாவலர்கள், பலமுறைகளில்எடுத்துவிளக்கிப் பத்திரிகைகளை நிரப்பி வருகின்றனர்.

மனிதனுடைய முதற் பசி வயிற்றுப் பசி. அதைத் தீர்க்க வக்கு இல்லை, வகை இல்லை, பேச ஆளில்லை, எழுத எழுத்தாளனில்லை, இந் நிலையில் எது மணம் என்பது பற்றி எழுதி என்ன பயன்? எங்கள் வயிறு நிறையுமா? மனம்தான் மகிழுமா? என்று கேட்கிற என்னருமை நண்பன் 'வீரமணி' ஒரு புறத்தில் குமுறுகிறான்.

பத்திரிகை விற்பனை நிலையத்திற்குச் சென்றாலும் நூல் நிலையத்திற்குப் போனாலும், மனதைக் கவர்வனவெல்லாம் மணத்தைப் பற்றிய புத்தகங்களேயென்று தோழன் 'உல்லாசம்' ஒரு பக்கத்தில் பேசுகிறான்.

இதற்கிடையில் 'எது மணம்?' என்று சிந்திக்கும் போது, 'இதோ என்னருமைக் கடிமணம்' என்று ஆரம்பமாகி, 'இதுவும் ஒரு மணமா?' என்ற நிலையில் முடிந்திருக்கிற பல சிறுகதைகள், பெருங் கட்டுரைகள் என் எண்ணத்தின் முன் கூத்தாடுகின்றன.

மணம் மனித வாழ்க்கையில் நடக்க வேண்டிய ஒரு கடன்.

ஆனால் அது நம் சமூகத்தில் மிக அதிசயமானதாக தெய்வீகமுடையதாக அபாயகரமானதாக சித்தரிக்கப் பட்டிருக்கிறது.

மொட்டு மலராக மாறும் போது மணம் வீச, அதை நோக்கி வண்டு மதுவுண்ண வருவது போன்ற இயற்கை நிலையிலேயே இருந்திருக்கிறது 'மணம்'. ஆனால் அது, சமூகத்தில் சர்வாதிகாரம் செலுத்த வேண்டும் என்று நினைத்த மதத்தால், மத குருக்களால் அதிசயமான, அசாதாரணமான ஒரு நிகழ்ச்சியாக, கற்பனையாக ஆக்கப்பட்டு விட்டது

காட்டு மிராண்டிக் காலத்திலும் மணமுறையில் சில கட்டுதிட்டங்கள் இருந்தன. அவைகள் நாளாவட்டத்தில் வளர்ந்து 'நாகரீகம்' என்ற பேரால் நாட்டிற்கு நாடு வேறுபட்டன. இனத்தோடு இனம், வர்க்கத்தோடு வர்க்கம் போரிட்டோ, சமாதனமாகவோ இணைய நேரிட்டபோது அந்தப் பழக்க வழக்கங்கள் ஒன்றோடு ஒன்று இணைந்துமாறுபட்டோ அல்லது புதிதான ஒரு பழக்க வழக்கம் தோன்றவோ செய்தன.

இவைகள் நல்லதோ கெட்டதோ நடக்க வேண்டியிருந்தன. நடந்தன.

ஆண் பெண்ணின் கூட்டுறவு உலகத்தில் தோன்றிய விதமோ, பின் காட்டுமிராண்டிக் காலத்தில் அவர்கள் வாழ்ந்தவிதமோ, இன்று நாம் தெரிந்து கொள்வதாலேயே நம்முடைய வாழ்க்கையைச் செப்பனிட்டுக் கொண்டு விடமுடியாது.

அல்லது முன்னோர்கள் இப்படிச் செய்தார்கள், அப்படிச் செய்தார்கள் என்ற விவாதத்திலும் இறங்கத் தேவையில்லை. கண்ணையும் கருத்தையும் அகல விரித்து இன்றைய உலகத்தை நீதியின் பக்கம் நின்று நாம் நன்கு நோக்கினால் நமக்கு எது மணம் என்பது விளங்கிவிடும்.

மேல் நாடுகளில் நடக்கும் மணத்திலுள்ள நன்மைகள், கீழ் நாடுகளில் நிலை நிற்கும் மணத்திலுள்ள தீமைகள் ஆகியவற்றை வேறுபாடு கருதாமல், உயர்வு தாழ்வு கற்பியாமல், மனத்தாா

இன் சாய்வின்றி ஆராய்வது நம் குறிக்கோளுக்கு வழி செய்யும்.

நம் நாட்டில் மண வாழ்க்கை பல குடும்பங்களில் பிண வாழ்க்கையாகமாறியிருக்கிறது. மணம் செய்கிற கட்டுப்பாடு காரணமாக, கொடுமைக்குள்ளாகிறவர்களையும், கொடுமை செய்கிறவர்களையும், கணக்கெடுத்துப் பார்த்தால் பெண்கள் தான் அக்கிரமத்திற்கு ஆளாகிறவர்களாகவும், ஆண்கள் அவர்களை ஆட்டிப் படைக்கும் ஆலகால விஷமாகவும் இருந்திருக்கிறார்கள்.

ஒருவனும் ஒருத்தியும் ஒத்த கல்வியும் ஒத்த வயதும், ஒத்த பண்பும் ஒத்த உருவமும் உடையவர்களாக அமையாவிட்டாலும் அவர்களுக்கிடையேயுள்ள வயதில், அறிவில், உருவத்தில், மாடி வீட்டிற்கும் குடிசைக்கும் உள்ள வேறுமை இருப்பதைக் கண்ணாரக் கண்டிருக்கிறோம். வேண்டியவராகவோ, உறவினராகவோ இருந்த நேரத்தில் கண்ணீர் சிந்தியிருக்கிறோம்! தெரியாதவராகவோ அறிமுகம் ஆகாதவராகவோ இருந்த நேரத்தில் சிரித்திருக்கிறோம்.

ஆனால், இந்த நிலைக்குக் காரணமென்ன? இந்தக் கேடு எப்படி சூழ்ந்தது? ஏன் இன்னும் இந்நிலை நிலைத்திருக்கிறது? போக்க வழியென்ன? என்று சிந்தித்ததில்லை.

பல நூற்றாண்டுகளாக அந்தக்கடவுளிடத்தும் விதியிடத்தும் போட்டுவிட்டு 'ஏனெடுத்தேன் இப் பிறவி?" என்று அழுகுரல் எழுப்பியிருக்கிறான் இந்நாட்டு மனிதன். "காயமே இது பொய்யடா, காற்றடைத்த பையடா?" என்று பிலாக்கணம் பாடியிருக்கிறான். பழமையிலே கட்டுண்டு கிடந்தவன் நல்லது தீயது எது என்று அறியாமல் புது வாழ்வு தரப்புகுந்த கருத்துக்களையும் எதிர்த்தான். அதனால் கொடுமையும் துன்பமும் அதிகமாக அதிகமாக அவன் சிந்திக்கத் தொடங்கினான்.

உலைக்களத்தில் சம்மட்டியின் அடிபட்டு தெறிக்கும் நெருப்புப் பொறிகள் போன்றே அவன் மூளையிலிருந்து தெறித்துவீழ்ந்த பல சிந்தனைப் பொறிகளில் ஒன்றுதான் 'எது மணம்?' என்பதுவும். ஆண் பெண்களை, மணமுறை என்ற அடிமைச் சங்கிலியால் இறுகக் கட்டிப்பிணித்து, சாதிமதம் என்ற சாட்டையால் இரத்தம் சொட்டச் சொட்ட அடித்து, அதை வைதீக வேதாந்த நரிகள் நக்கவிடுத்து, சமுதாயத்தை அழிவுப் பாதை நோக்கி நடக்கவிட்டுவிட்டோம். இதற்கெல்லாம் மூலகாரணம் இந்த மணமுறைதான் என்பதைக் கண்ட சிந்தனைச் சிற்பிகள், ஆட்டுமந்தை போல் சென்று கொண்டிருந்த மக்கள் கூட்டம் விழித்து வீறு பெற உரத்த குரலில் கேட்டனர் 'எது மணம்?' என்று.

பின்புதான் கிழவன் குமரி மணம், பலதார மணம், மனைவியை நீக்கி வைத்துச் செய்து கொள்ளும் புது மணம், பணம் தரும் மணம், இன்ன பிற மணங்களெல்லாம் பெண் மக்களைப் பிணங்களாக்கிய மணங்கள்தான் என்பதை உணரத் தலைப்பட்டான் மனிதன்.

ஆகவே அவன் ஆத்திரமாகக் கேட்டான், 'இதுவா மணம்?' என்று. அப்பிண மணங்கள் அவனது சிந்தனைக் கூக்குரல் முன் நிற்க முடியாமல் பழமையின் இருப்பிடங்களான குக்கிராமங்களுக்கு ஓடி ஒளிந்தன.

நகரங்களில் மாளிகையினுள்ளே பணப்பெட்டிக்கு அடியிலே சென்று பதுங்கின. எங்கெங்கெல்லாம் சென்று அது ஒளிகிறதோ அங்கெங்கெல்லாம் சென்று போராட ஆரம்பித்திருக்கிறான் இன்றைய மனிதன்.

விதவை மணம், கலப்பு மணம், காதல் மணம் இவைகள் தான் உண்மையான மணங்கள். மற்றவையெல்லாம் ஊரை ஏய்க்கும் உலுத்தரின் பிண விவாகமென கர்ஜித்தான்.

மணம், வாழ்க்கையில் 'மணம்' தருவதாக இருக்க வேண்டும். இருமனம் ஒன்றுபட்டதே திருமணம். அந்த இரு மனங்களுக்கிடையிலே சம்பிரதாயமோ, பழக்க வழக்கமோ, சாதிப் பூசலோ தலையிடக் கூடாது, என்றெல்லாம் முழக்கினான்.

சட்டமானது, தவறு செய்ய இடம் தருகிற முறையிலேயே இயற்றப்பட வேண்டும் என்று அரிஸ்டாட்டில் கூறியது போலவே, மணமும், பிரிய முடியாத இருப்புச் சங்கிலியாக இல்லாமல், அவசியமானால் அவிழ்த்துக் கொள்ளக்கூடிய கயிற்று முடிச்சாக இருக்க வேண்டும், என்று எண்ணினான்.

ஆம்! அதுதான் 'மணமுறிவுரிமை', 'விவாகரத்து'! இவைகளைக் கேட்டவுடனேயே மூர்ச்சையடையுமளவு அதிர்ச்சியைத் தரும் சொற்களாகச் சிலருக்கு இவை தோன்றுவதில் ஆச்சரியமில்லைதான்.

'விவாக ரத்து' என்றவுடனேயே நம்மில் பலர் 'விபசார உரிமை' என்று நினைத்துவிடுவது மாத்திரமல்லாமல், மேனாட்டுப் பழக்க வழக்கங்களிலிருந்து கடைந்தெடுத்த கெட்ட ஒழுக்கம் என்றும் வசைபுராணம் பாட ஆரம்பித்து விடுகின்றனர்.

(6-ம் பக்கம் பார்க்க)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருத்தியின்மீதுதான் தங்களுடைய ஆத்திரத்தைப் பொழியலாயினர்.

எல்லோருடைய கோபமும் கொதிப்பும், அருவருப்பும் ஆவேசமும், அலை அலையாக எழுந்து, அந்த 29 வயது படைத்த ஆரணங்கின் மீதுதான் தங்களுடைய அரிய படையெடுப்பை நிகழ்த்தலாயின.

வெட்கம் கெட்டவள், மானம் இழந்தவள், ரோஷம் அற்றவள், பழிமிகு பணிபுரிந்தவள் என்கிற இத்தகைய சுடுசொற்களைத்தான் மக்கள், அன்றையதினம், அவளுடைய பெயரின்மீது அள்ளி வீசலாயினர்.

ஜெர்ரி கோபர்ன்!—இந்தச் சொற்றொடரைக் கேட்டதும், மக்கள், அன்றையதினம் ஆத்திரத்தின் உருவங்களாகவும், கடுங்கோபத்தின் சின்னங்களாகவும்தான் மாறினர்.

அவள் எங்கெங்கே சென்றாளோ அங்கெல்லாம் ஏசல் பாணங்களும் தூற்றல் அம்புகளும்தான் அவளை வரவேற்றன.

அதோ போகிறாள் பார் வெட்கம் கெட்ட சிறுக்கி என்றுதான் அவளைப் பார்த்து சின்னஞ்சிறுவர்கள் கூட அன்றையதினம் பேசி ஏசலாயினர்.

என்னதான் செய்துவிட்டாள் **ஜெர்ரி கோபர்ன்**? ஏன் இவ்வளவு ஆத்திரமும் அருவருப்பும் மூண்டுவிட்டன அவள்மீது? எதற்காக நியூயார்க் நகரமே சீறியெழுந்து சினத்தைக் கொட்டிற்று அவள் பெயர்மீது?

எவரும்தான் கேட்பர் இத்தகு கேள்விகளை!

"அமெரிக்க நாட்டின் ஆட்சியாளர்கள், அந்த நாட்டு மக்களால் சுமக்கமுடியாத அளவுக்கு ஏராளமான வரிகளை விதித்து விட்டிருக்கிறார்கள். இந்த வரிச்சுமை காரணமாக அமெரிக்க மக்களின் வாழ்வு வளைந்துபோயிருக்கிறது. அவர்களுடைய வாழ்க்கையிலே இன்பம் தவழவேண்டுமானால் இந்த வளைவு போக்கப்படவேண்டும்--வரிச்சுமை குறைக்கப்படவேண்டும்" — இது, **ஜெர்ரி கோபர்ன்** என்னும் அந்த அம்மையாரின் கருத்து.

இந்தக் கருத்தை ஊர் மக்களுக்கெல்லாம் தெரிவித்து, ஆட்சியாளர்களின் போக்கை மாற்றுவதற்காக அந்த அம்மையார் சிறியதோர் கிளர்ச்சியை நடத்திவைத்தார்கள். அந்தக் கிளர்ச்சியைக் கண்ட பிறகுதான், நியூயார்க் மக்கள், அந்தப் பாகுமொழிப் பாவை மீது, நாம் முதலிலே தெரிவித்தபடி, பழிச்சொற்கள் பலவற்றை அள்ளி அள்ளி வீசினார்கள்.

"இதென்ன அக்கிரமம்! வரிகள் குறையவேண்டும்—வாழ்வில், இன்பம் தவழவேண்டும் என்கிற நல்லதோர் கிளர்ச்சியைப் புரிந்ததற்காகவா, மக்கள், மங்கைமீது சீறிவிழுந்தார்கள்! நம்ப முடியவில்லையே!" என்று வாசகர்கள் திகைப்படையக்கூடும்.

ஆனால் உண்மையாகவே, வாழ்க்கையை வதைத்துவரும் வரிச்சுமை குறைய வேண்டும் என்பதற்காகத்தான், ஜெர்ரி கோபர்ன், கிளர்ச்சி ஒன்றைத் தொடங்கினாள். அந்தக் கிளர்ச்சியைக் கண்டுதான், நியூயார்க் மக்கள், கடுங்கோபம் காட்டினர் அந்தக் கனிமொழியாள்மீது!

அப்படியானால் அந்த மக்களெல்லாம், "வரிகள் அதிகமாக இருக்கவேண்டும், வாழ்க்கை, வேதனையின் பிறப்பிடமாக இருக்கவேண்டும் என்ற எண்ணம் படைத்தவர்களோ?" என்று கேட்கத்தோன்றும் வாசகர்களுக்கு.

அப்படியும் இல்லை நிலைமை.

ஜெர்ரி கோபர்ன் என்ற மங்கையைப் போலவேதான், அந்த மக்களும், வரிச்சுமையை உடனே குறைத்தாகவேண்டும் என்கிற கிளர்ச்சியைப் புரிந்துவந்தார்கள்.

ஆம்! உண்மை! வரிச்சுமை குறையவேண்டும் என்கிறகிளர்ச்சி புரிந்துவந்த மக்கள்தான் அதே கிளர்ச்சியைச்செய்யத் தொடங்கிய ஜெர்ரி கோபர்ன் என்னும் அம்மையை, அந்தக் கிளர்ச்சியைப் புரியத் தொடங்கிய காரணத்திற்காகவே, இழித்தும் பழித்தும் பகைத்தும் வெறுத்தும் பேசலாயினர்.

பித்தமோ அந்த மக்களுக்கு?—கேட்க விரும்புவர் எவரும்.

பித்தமும் இல்லை அந்த மக்களுக்கு! அவர்கள், அந்த மங்கையை வெறுத்ததற்குக் காரணமும் இல்லாமல் இல்லை.

வரிச்சுமை குறைக்கப்படவேண்டும் என்று எண்ணினாள் ஜெர்ரி கோபர்ன். அந்த எண்ணம் நியாயமானது. வரிச்சுமையைக் குறைக்க அரியதோர் கிளர்ச்சியைத் தொடக்கவேண்டும்—அப்போதுதான் ஆட்சியாளர்கள் அசைந்து கொடுப்பார்கள் என்று கருதினாள் அந்த அணங்கு. அந்தக் கருத்தும் நேர்மையானது. ஆனால் அந்தக் கிளர்ச்சியை நடத்துவதற்கு அவள் கையாண்ட முறை இருக்கிறதே, அதுதான், யாரும் ஒப்புக்கொள்ளமுடியாதது. யாரும் ஒப்புக்கொள்ள முடியாததுமட்டுமல்ல, எல்லோராலும் வெறுக்கப்படக்கூடியது.

அக்டோபர் இறுதியில், ஓர் நாள் நியூயார்க் நகரத்தில், அந்த நகரத்து மக்களை வதைத்துவரும் வரிச்சுமை குறைக்கப்பட வேண்டும் என்கிற கிளர்ச்சிக்குரலை எழுப்புவதற்காக மகத்தானதோர் கூட்டம் கூட்டப்பட்டது, அந்த நகரத்தைச் சேர்ந்த நல்லறிஞர்கள் சிலரால்.

கூட்டம் நடந்துகொண்டிருக்கிறது. சொற்பொழிவாளர்கள், வரிப்பளு அதிகமாக இருப்பதால் நகரவாசிகளுக்கு ஏற்பட்டுள்ள சஞ்சலங்களையும் சங்கடங்களையும் தெளிவான முறையில் விளக்கிக்கொண்டிருக்கின்றனர். திரண்டு குழுமியுள்ள மக்களெல்லாம் அந்த விளக்கவுரைகளை ஆர்வத்துடன் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

திடுதிடுவென்று ஒரு சப்தம் கேட்டது திடீரென்று.

எங்கிருந்து சப்தம் வருகிறது என்று திரும்பிப் பார்த்தனர் மக்கள்.

கூட்டத்தின் ஒரு மூலையை நோக்கி வேகமாக ஓடிவந்து கொண்டிருந்தது ஒரு குதிரை. வெறும் குதிரை மட்டுமல்ல ஓடிவந்தது. அந்தக் குதிரைமீது ஜெர்ரி கோபர்ன் என்கிற மாது வீற்றிருந்தாள். அந்த மாதரசியின் உடலிலேயோ, ஆடை; துளியளவும் இல்லை. அவள்; முழு நிர்வாணமான நிலையில், புன்னகைபூத்த முகத்துடன், பூரிப்புடன் வீற்றிருந்தாள் குதிரைமீது.

பிரம்மாண்டமானதோர்பொதுக் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறபோது, கட்டான தேகமும் களைபொருந்திய முகமும் படைத்த இளமங்கை ஒருத்தி, நிர்வாண நிலையில், குதிரைமீதேறிக் கொண்டு,

கூட்டத்தை நோக்கி ஓடி வந்தால், கூட்டத்தில், பரபரப்பும் திகைதிகைப்பும் கொந்தளிப்பும் குழப்ப நிலையும் ஏற்படாமலா போகும்? ஏற்பட்டன! கூட்டத்தின் அமைதி குலைந்தது! ஒழுங்கு சிதைந்தது! கூட்டம் குழப்பத்தில் முடிந்தது!

கூட்டம் முடிந்தபிறகு, கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்கள், அம்மையாரை அழைத்து, ஏன் இப்படிச் செய்தீர்கள் என்று கேட்டபோது, அம்மையார் அளித்த பதில் இருக்கிறதே, அதுதான் மிகவும் வேடிக்கையானது.

“நியூயார்க் நகரவாசிகள்மீதும் ஏனைய பல நகரவாசிகள்மீதும் விதிக்கப்பட்டுள்ள வரிச்சுமை மிக அதிகம் என்பது என் கருத்து. அந்தச் சுமையை உடனே குறைத்தாகவேண்டும் என்பது என் எண்ணம். அந்தச் சுமை குறைக்கப்படவேண்டுமானால், அதற்கென்று தனியானதோர் கிளர்ச்சியைத் தொடங்கவேண்டும் என்பது என் முடிவு. வரிக்குறைப்புக் கிளர்ச்சிக்காக வேறு பல முறைகளைக் கையாள்வதைவிட பொதுக்கூட்டம் நடந்துகொண்டிருக்கிறபோது நிர்வாணமான நிலையில் குதிரை சவாரி செய்வது என்கிற இந்த முறையைக் கையாள்வது அதிக பலனைத் தரும் என்பது என் நம்பிக்கை. மக்களின் கவனத்தை வரிக்குறைப்புக் கிளர்ச்சியின் பக்கம் திருப்ப இதைவிடச் சிறந்த மார்க்கம் இருக்க முடியாது என்பது என்னுடைய தீர்மானம்.”

இதுதான் அம்மையார் அளித்த “அருமையான” விடை.

நிர்வாணமாகக் குதிரை சவாரி செய்வதன் மூலம்தான் வரிக் குறைப்புக் கிளர்ச்சிக்கு அதிக செல்வாக்கு ஏற்பட முடியும்! ஆகவேதான் அந்த அற்புத காரியத்தை அவசர அவசரமாகச் செய்தார்களாம்!

அம்மை ஜெர்ரி கோபர்ன் இது போலக் கூறிடக் கேட்டபோது எவருக்குத்தான் சிற்றமும் சிரிப்பும் ஒருங்கே தோன்றாமலிருக்க முடியும்! அந்த ஆரணங்கின் அநாகரிகச் செயலை எதிர்த்து நியூயார்க் நகரமக்களெல்லாம் கோபத்தையும் கொதிப்பையும் கொட்டியதில் தான் வியப்பென்ன இருக்கமுடியும்?

வரிகள் குறைக்கப்படவேண்டும் என்பது அம்மையாரின் நோக்கம். அந்த நோக்கம் மிகவும் சிறந்தது. அதை யாரும் மறுக்க முடியாது.

ஆனால் அந்த நோக்கத்தை நிறைவேற்ற அம்மையார் கையாண்ட முறை இருக்கிறதே அதைத்தான் ஒருவரும் ஒப்புக்கொள்ள முடியாது.

நிர்வாண சவாரி செய்வதன் மூலம்தான் மக்களின் கவனத்தை வரிக் குறைப்புக் கிளர்ச்சியின் பக்கம் திருப்ப முடியும் என்று அம்மையார் கருதி, அத்தகு சவாரியைச் செய்து காட்டினார். ஆனால் அந்தச் சவாரியின் முடிவாக ஏற்பட்ட விளைவு யாது? வரிக்குறைப்புக் கிளர்ச்சியின் பக்கம மக்களின் கவனம் திரும்பிற்று? இல்லை! மாறாக, அந்த அம்மையார் இருந்த பக்கம் மக்களின் ஆத்திரப் பார்வைதான் திரும்பிற்று.

நோக்கம் சிறந்ததாக இருந்தாலும், அந்த நோக்கத்தை நிறைவேற்ற அம்மையார் கையாண்ட முறை சரியாக இல்லாதுபோன காரணத்தால், அம்மையாரின் நோக்கமும் நிறைவேறவில்லை. அம்மையார்மீது மக்களுக்குப் பாசமும் ஏற்படவில்லை. தூற்றலும் பழியும் ஏசலும் வசையும் தான் அம்மையார் பட்ட பாட்டிற்குக் கிடைத்த அரிய பரிசுகளாக அமையலாயின.

அமெரிக்காவில் மட்டுமல்ல, இந்தியாவிலேயும் இப்படிப்பட்ட ஜெர்ரி கோபர்ன்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். சொல்லப்போனால், இந்தியாவில்தான் ஜெர்ரி கோபர்ன்கள் ஏராளமாக இருக்கிறார்கள்.

தோழர் நிக்கோல்ஸ்ராய் என்பவர் அஸ்ஸாம் மாகாணத்தின் சுகாதார மந்திரி. பழுத்த தேசபக்தர். நெடுங்காலமாகக் காங்கிரஸ் வட்டாரத்தில் உலவிவரும் கண்ணியவான். அஸ்ஸாம் காங்கிரஸ் பார்லிமெண்டரி கட்சியின் துணைத் தலைவர்.

இவர், நவம்பர் இரண்டாம் தேதி முதல் மூன்று நாட்கள், உண்ணாவிரதமிருந்து, ஆண்டவனை நோக்கிப் பிரார்த்தனை புரிந்திருக்கிறார்.

எதற்காகவாம் தெரியுமா? அசாம் மக்களுக்கு ஏற்பட்டுள்ள ஏராளமான கஷ்டங்கள் யாவும் தீர்ந்து, அவர்கள் வாழ்க்கையிலே இன்பம் மலர்ந்து, சுபிட்சமும் சுகமும் தவழ்ந்து விளையாடவேண்டும் என்பதற்காகவாம்.

அமெரிக்க மாது ஜெர்ரி கோபர்ன் அவர்களின் விபரீத நடத்தைக்கும், இந்த அஸ்ஸாம் அமைச்சர் தோழர் நிக்கோல்ஸ்ராய் அவர்களின் விசித்திரப் போக்குக்குமிடையே எந்தவித வேறுபாடும் இருப்பதாக நமக்குத் தெரியவில்லை.

அமெரிக்க அணங்கைப்போலத் தான் இந்த அஸ்ஸாம் அமைச்சரின் நோக்கம் சிறந்ததாக அமைந்திருந்தபோதிலும், அந்த நோக்கத்தை நிறைவேற்ற இவர் கையாண்டுள்ள முறை விசித்திரமானதாகவும், விபரீதம் நிரம்பியதாகவும், அமைந்திருக்கிறது.

வரிகளைக் குறைப்பதற்காக அமெரிக்க மாது, நிர்வாணக் கிளர்ச்சி என்கிற நீசத்தனமான முறையை மேற்கொண்டார்.

மக்களின் துயரங்களைப் போக்குவதற்காக, அஸ்ஸாம் காங்கிரஸ் அமைச்சர் உண்ணாவிரதக் கிளர்ச்சி என்கிற உதவாக்கரைத் திட்டத்தைக் கையாண்டிருக்கிறார்.

இரண்டு முறைகளுமே அநாகரிகமானவை. காட்டுமிராண்டிகளின் குருட்டுப் போக்கிலே அமைந்தவை. நாகரிக உள்ளம் படைத்த யாரும் ஒப்புக்கொள்ள முடியாதவை.

நிர்வாணச் சவாரி புரிவதன் மூலம் எப்படி நாட்டின் வரிகள் குறையமாட்டாவோ அப்படித்தான், உண்ணாவிரதம் இருப்பதன் மூலம் மக்களின் துயரங்கள் தீரமாட்டா.

தோழர் நிக்கோல்ஸ்ராய் சாதாரண மனிதரல்ல. அஸ்ஸாம் மாகாணத்தின் பொறுப்புள்ள ஓர் அமைச்சர். ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருப்பவர். அஸ்ஸாம் மக்களின் வேதனைகளையும் சங்கடங்களையும் தீர்த்து வைப்பதற்குத் தேவையான வசதியும் வாய்ப்பும் நிரம்பிய ஓர் இடத்தில், அதாவது மந்திரிசபையில், மகிழ்ச்சியுடன் வீற்றிருப்பவர்.

அவருக்கு மட்டும் போதுமான திறமையும் கொஞ்சம் அறிவுக்

(12-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

"காலங் கெட்டுவிட்டது! கலிகாலம்! அந்த காலத்திலெல்லாம்..........." என்று தலையிலடித்துக் கொண்டு பேச்சைத் துவங்கிவிடுகின்றனர் சிலர், இதைப்பற்றிப் பேச ஆரம்பித்தவுடனே.

ஆம். விவாகரத்தை நம்மவர் வாழ்வில் நம்முடைய நாட்டில் கண்டதேயில்லை போல் நாம் விழிக்கத்தான் செய்கிறோம். விவாகரத்துரிமை, கணவன் மனைவியர், இனி தாங்கள் சேர்ந்து வாழ முடியாது என்ற நிலையேற்பட்டால் தங்கள் விவாகத்தை ரத்து செய்து கொள்ள உரிமை தருவதாகும்.

இது, இந்நாட்டிலேயே யில்லாத—இதுவரைநடந்திராத ஓர் புதிய புதிரா? என்பதை நாம் முதலில் பார்க்கத்தானே வேண்டும்.

பிறை சூடிய பெம்மான் பரமசிவன், பார்வதி தேவியார், பிரம்மனை பதியென்று எண்ணியதற்காகவே விவாகரத்து செய்து பூலோகத்துக்கு அனுப்பியிருக்கிறார். ஆயர் குல மங்கையர்-ஆயிரவர் மணாளனார்-திருமால், இராமாவதாரத்திலே, சீதாபிராட்டியை, ஒரு வண்ணானின் இழி சொல்லிற்காக, விவாகரத்து செய்து காட்டிற்கு அனுப்பினான். இந்திரனோடு சுகித்திருக்க ஒரு நாள் இரவு மாத்திரம் கௌதமரை விவாகரத்து செய்தாள், இராமனின் புனித பாதங்கள் பட்டுப் புத்துயிர் பெற்ற அகலிகை!

இவையெல்லாம விவாகரத்தா? இவைகளுக்கு விவாகரத்து என்ற பெயர் இல்லைதான். ஆனால் உண்மையில் விவாகரத்து அல்லாமல் வேறென்ன இவைகள்? புராணக் கதையைக் கூறிப் பிரச்னையை மழுப்பி விடுகிறேன் என்று நினைக்கலாம் சிலர். அவர்களுக்கு இதோ நாட்டிலே நான் கண்ட—ஏன் நாம் கண்ட ஆனால் வெளியில் சொல்ல வெட்கப்படுகின்ற காட்சிகளிலே ஒன்று.

"ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே" என்ற பாட்டைக் கேட்டுக் களிக்கிறானே, அதோ, அந்த சிங்காரம் பிள்ளை அவன் பக்கத்து நாற்காலியிலே உட்கார்ந்திருக்கும் அவன் தர்ம பத்னி சிவானந்த வல்லியைக் கேட்டுப் பாருங்கள். அந்தப் பாவையை அவன் பதுமையாகக் கருதுகிறானே அதன் காரணத்தைக் கேளுங்கள்.

ஓர் நாள்............தன் வீட்டுக் கதவைத் தட்டினார் சிங்காரம் பிள்ளை. சிவானந்த வல்லி வரவில்லை கதவைத் திறக்க. கோபம் பொங்கியது பிள்ளைக்கு. கோபம் கண்ணை மறைக்கும் என்கிறார்களே அது உண்மையோ பொய்யோ எனக்குத் தெரியாது. ஆனால் கதவிடுக்கு வழியே வீட்டினுள் கோபத்தோடுபிள்ளை கண்ணை ஓட்டியபோது இரண்டாவது கட்டில் இரண்டு உருவங்களின் நிழல்கள் நன்றாகத்தான் தெரிந்தன. அது மாத்திரமா? கேட்டது பேச்சொலியும், இடையிடையே சிரிக்கும் சப்தத்தோடு. பின் கேட்க வேண்டுமா? சிங்காரத்தின் கண்கள் சிவந்தன. "திரௌபதை, சீதை, அகலிகை"..........இவர்களெல்லாம் ஓர் நொடியில் அவர் அகக்கண்ணில் தோன்றி மறைந்தனர். கோபத்தைக் கதவின் மீது காட்டினார்.

அப்பொழுதுதான் கதவு தட்டும் சப்தத்தைக் கேட்ட சிவானந்த வல்லி எழுந்தாள் துடிதுடித்து.

"ஐயோ! உன் பேச்சால் இன்றைக்கு அவர் கதவு தட்டும் சப்தத்தைக்கூட கேட்க முடியாமல் போய்விட்டதே!" என்று கூறி விட்டு கதவை அம்மையார் திறந்தார்கள்.

"திருட்டுச் சிறுக்கி! உண்மையைச் சொல். கதவு திறக்க ஏன் இந்நேரம்?" என்று கண்கள் கனல் கக்கக் கேட்டார் சிங்காரம். அடுத்த வீட்டு அரங்கநாயகியோடு பேசிக்கொண்டிருந்ததைக் கூறினால் "அரட்டைக் கச்சேரியோ?" என்று கூறி தன் கை வரிசையைக் கணவர் காட்ட ஆரம்பித்தால் என்ன செய்வது என்று பயந்த அம்மையார் அதைச் சொல்லவும் தைரியமின்றி, சொல்லாமலிருக்கவும் முடியாதநிலையில் விழித்தார்கள். சிங்காரத்தின் சந்தேகம் வளர்பிறையாக வளர்ந்து பூர்ண சந்திரனாகவே முழுஉருவம் பெற்றுவிட்டது. "சிறுக்கி! கொண்ட கணவன் நானிருக்கக் கள்ளக் காதலனோடு குலாவுகிறாயோ நானில்லாத சமயமாகப் பார்த்து?" என்று தீக்கப் பேச ஆரம்பித்தார் பிள்ளை.

"அடுத்த வீட்டு..............." என்று ஆரம்பித்தார்கள் அம்மையார். "ஆமாம்! எனக்கு முன்பே சந்தேகம்! அடுத்த வீட்டு அங்கப்பனோடு உன் சரசவிளையாட்டுத்தானே! இன்று புரிந்துகொண்டேனதை. குலதெய்வத்தின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன், யான் இனி உனைத் தொடேன்" என்ற முடிவுரையோடு முடிந்தது அவர்கள் வாழ்வின் இணைப்பு. அன்றோடு அறுந்தது அவர்கள் வாழ்வின் பிணைப்பும்.

ஆனால் இதற்குப் பெயர் விவாகரத்து அல்லதான் இந்த நாட்டில். இது உண்மையில் விவாகரத்தா இல்லையா என்பது நேர்மையுள்ளம் உள்ள எவருக்கும் விளங்காமல் போகிவிடாது.

ஆகவேதான் கூறுகிறோம் நம் நாட்டிற்கு விவாகரத்து புதிதல்ல

ஆண்களுலகத்தைப் பொருத்த வரையில். ஆண் இனத்திற்கு மாத்திரம் இருக்கும் உலகமறிந்த இவ்விரகசிய உரிமையை பெண்கள் சமூகத்திற்கும் அளிக்கிறது "விவாகரத்து மசோதா" என்று கொள்ளுவதே பொருந்தும்.

இந்துசமூக சம்பிரதாயப்படி, ஆண்மகனுக்கு தன் மனைவியை நீக்கிவைத்து வேறொருத்தியைக் கொள்ளவோ அல்லது வேறு பெண்ணை நேசிக்கவோ இடமிருக்கிறது. ஆனால் பெண்கள் சமூகத்திற்குத்தான் அவ்வுரிமை தரப்படவில்லை. ஆகவேதான் ஆணும் பெண்ணும் இணைந்து சம உரிமையோடு நடத்தப்படவேண்டிய இல்லற வாழ்வு பிணவாழ்வாக இருக்கிறது பெரும்பாலான குடும்பங்களிலே.

ஒரு மாட்டிற்கு மாத்திரம் மூக்கணாங்கயிறிட்டு இழுத்துப் பிடித்துத் தார்கோல் கொண்டு, குத்தி ஓட்ட முயலும் இரட்டை மாட்டு வண்டிக்காரன் போன்று இன்றைய சமூகம் இருப்பதால்தான் நம்முடைய நாடு முன்னேற்றத்தின் முதலடியைக்கூட தாண்ட முடியவில்லை.

மஞ்சள் கயிறு கழுத்தில் ஏறினவுடன் கட்டினவனுக்கு அவள் அடிமை, கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்று பெண்கள் பொறுமையுடன் வாழவேண்டும் என்றிருக்கும் நிலைமையை, சமுதாய சீர்திருத்தப் பிரசாரம் நீண்ட நாட்கள் செய்வதால் மாத்திரம் மாற்றியமைத்துவிட முடியாது. ஆகவேதான் ஒருவன் தன் மனைவியை வெறுத்தால், அவளைக் கொடுமைப் படுத்தினால், அல்லது உறவினர் அவளைக் கொடுமைப் படுத்துவதைக் கவனிக்க மறுத்தால், வேறொருவனை மணக்க அவளுக்கு சட்டப்படி உரிமை இருக்கிறது என்பதை யுணர்ந்தால்தான் அவளிடம் காட்ட வேண்டிய—காட்டக்கூடிய பொறுமையைக் காட்டுவான்.

இல்லையெனில், 'அம்' என்றால் சிறைவாசம் 'ஏன்' என்றால் வனவாசம் எனத்தகும் அதிகாரம் சமூகத்தில் ஆண்கள் கையில் இருக்கிற வரையில் பெண்கள் சமூகம் வாழாவெட்டியாகத்தான் இருக்கும்.

நம்முடைய நாட்டு மோசமான கணவன் மனைவியர் நிலை, ஆறாத கைப் புண்ணாக இருந்தும், சீர்திருத்தம் என்ற கத்திகொண்டு அறுத்து, பழைமைச் சீழைப் போக்காமல், விதி என்ற புனுகு பூசி, வைதீக வாசனைத் தைலமிட்டு, மறைத்து வைத்திருப்பதனால் தான் நம்மாலேயே உணர முடியவில்லை என்பது மாத்திரமல்ல, நம்முடைய சமூகம் புரையோடிப் போய்க்கொண்டிருக்கிறது.

மற்ற நாடுகளில் மணமக்களிடையே சண்டை தோன்றி விளைவு விபரீதத்தில் முடிந்தால் அதனால் பாதிக்கப்படுபவர்கள் ஆண் பெண் இருபாலருமாகும். ஆனால் நம் நாட்டிலோ ஆண்களல்ல பாதிக்கப்படுபவர் பெண்கள் கூட்டமாகும்.

பெண்களை ஆட்டிப்படைக்கும் ஏகபோக பாத்தியதை ஆண்களின் சொந்தப் பட்டாவாக இருக்கிறது இன்று. இந்நிலையை மாற்ற விவாகரத்துரிமை நிச்சயமாக உதவி செய்யும்.

"ஐயகோ! இச் செந்தமிழ் நாட்டிலா விவாகரத்து? தன்னுடைய கணவன் படுகொலை செய்யப்பட்டதைக் கேட்டவுடனே உடல்பதற ஓடிப் பாண்டியனிடம் அஞ்சாமல் முறையிட, "நீதி பிழைத்தோம், இனி நின் உலகினில் வாழோம்" என்று உணர்ந்து பாண்டியன் உயிரிழக்கக் காரணமானவளும், மதுரை—ஒரு பெரு நகரம்—தீச்சுழலில் சாம்பலாவதற்குக் காரணமானவளுமாகிய கற்புக்கரசி வீரக் கண்ணகி வாழ்ந்த நாட்டிலா விவாகரத்து?

"பிறர் மனை அஞ்சுமின்" "கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில்" என்று அறைந்து தமிழரின் உயர்ந்த பண்பினை எடுத்துக் காட்டிய சொல்லின் செல்வன் இணையிலாக் கவிஞன் இளங்கோவடிகள் பிறந்த நாட்டிலா விவாகரத்து?

தன் கண்ணிமை விட்டகலாக் கணவன்—ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் செங்கோல் வளைந்தமை கண்டு மயங்கி வீழ்ந்து இறந்தான் என்பதைக் கண்டவுடனே தானும் உயிர்விட்ட கோப்பெருந் தேவி பிறந்த நாட்டிலா விவாகரத்து?

"ஏ இயற்கையே, உனக்கு ஏன் இவ் வஞ்சகம்? என்னுடைய மனைவியின் உயிரை நோய் வரச் செய்து போக்கி விட்டாய். ஐயோ! என் ஆருயிரை அதோ சுடலையில் எரிக்கக் காண்கிறேனே. என்னுடைய உயிரை ஏன் இன்னும் போக்கவில்லை?" என்று கூறி அதோ. சேரமான் கோட்டம் பலத்துத் துஞ்சியமாக்கோதை, தன் பெருங்கோப்பெண்டு துஞ்சியகாலை துடிதுடித்து நின்றானே, அவனைப் பற்றி எந்தத் தமிழ்க் காப்பியத்திலாவது படிக்க உமக்கு வாய்ப்பில்லாவிட்டாலும் இன்று நாட்டிலே காது துளைக்கு மளவு செய்யப்படும் தமிழ் முழக்கத்தில் கேட்டிருக்க வேண்டுமே! இல்லையெ

(10-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

சென்னை 10—11—51 சனிக்கிழமை

நிமிர்ந்து நிற்கிறது மைசூர்!

தாழ்ந்து பணிகிறது சென்னை!

★

மைசூர் உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதியை விஷம் கொடுத்துக் கொல்ல முயன்றதாகத் தோழர் எல். எஸ். ராஜூ என்பவர்மீதும் வேறு மூவர்மீதும் மைசூர் போலீசாரால் சில காலத்திற்கு முன்பு ஒரு கிரிமினல் வழக்கு தொடுக்கப்பட்டது.

அந்த வழக்கு, பெங்களூர் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டால் விசாரிக்கப்பட்டு, இப்போது, பெங்களூர் செஷன்ஸ் கோர்ட்டுக்கு, மேல் விசாரணைக்காக அனுப்பப்பட்டிருக்கிறது.

மைசூர் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியை விஷம் கொடுத்துக் கொல்ல முன்றதாக நான்கு தோழர்கள்மீது குற்றம் சாட்டப்பட்டு விசாரணை செய்யப்படுகிற வழக்காக இது இருப்பதால், மைசூர் மக்களின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்துவிட்டிருக்கிறது இந்த வழக்கு.

மைசூர் பத்திரிகைகளிலே, அடிக்கடி, இந்த வழக்கைப்பற்றிய விசாரணைகளும் விவரங்களும் விளக்கமாக வெளியிடப்பட்டு வருகின்றன.

மைசூர் ஆட்சியாளர்களும், இந்த வழக்கு விசாரணையை, மிகவும் கூர்மையான கண்களுடன் கவனித்துவருகின்றனர்.

மைசூர் சட்டசபை உறுப்பினர்களின் கண்கள்—காதுகள்—ஆகியவையும் இந்தக் கொலை முயற்சி வழக்கின் பக்கம் அடிக்கடி திருப்பப்பட்டுவருகின்றன.

இந்தக் கொலை முயற்சி வழக்கு, மைசூர் இராஜ்யத்திலே மிகவும் பிரபலம் வாய்ந்ததாக ஆகிவிட்டது என்பதுமட்டுமல்லாமல், அகில இந்தியாவின் கவனத்தையேகூட ஓரளவு தன் பக்கம் இழுக்கக் கூடிய சக்தியும் செல்வாக்கும் பெற்றதாக அமைந்துவிட்டிருக்கிறது.

பெங்களூர் மாஜிஸ்டிரேட் கோர்ட்டிலே விசாரித்து முடிக்கப்பட்டு, இனி பெங்களூர் செஷன்ஸ் கோர்ட்டிலே விசாரிக்கப்படவிருக்கிற இந்த முக்கியமான வழக்கை, பெங்களூரிலேயோ, அல்லது மைசூர் இராஜ்யத்திலேயே அமைந்திருக்கின்ற வேறு எந்த ஊரிலேயோ உள்ள எந்த வழக்குமன்றத்திலும் விசாரிக்கக்கூடாதென்றும், இந்த வழக்கு விசாரணை, உடனடியாக பம்பாய் அல்லது சென்னை மாகாணத்தில் உள்ள ஏதாவது ஒரு செஷன்ஸ் கோர்ட்டுக்கு மாற்றப்பட்டாக வேண்டுமென்றும், அண்மையில், இந்தியக் குடியரசுத் தலைவர் இராஜேந்திர பிரசாத், திட்டவட்டமான தாக்கீது ஒன்றை அனுப்பியிருக்கிறார் மைசூர் ஆட்சியாளர்களுக்கு!

சென்னை மாகாணத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கிற ஏதாவது ஒரு வழக்கை உடனடியாக வேறு ஏதாவது ஒரு மாகாணத்தில் உள்ள ஏதாவது ஒரு மன்றத்திற்கு மாற்றுங்கள் என்று டில்லி, எழுத்து மூலம் கூட கட்டளை பிறப்பிக்க வேண்டாம், வெறும் வாய்மொழியாகச் சொன்னால்கூட போதும், சென்னை காங்கிரஸ் அமைச்சர்கள், உடனே, ''ஆஹா அப்படியே செய்வோம் சாமி'' என்று பணிந்து கொடுத்து டில்லியின் காலில் வீழ்ந்து வணங்கத் தயங்கமாட்டார்கள்.

ஆனால் மைசூர் ஆட்சியாளர்கள், சென்னை ஆட்சியாளர்களைப்போல உதைத்த காலுக்கு முத்தம் கொடுப்பதையே பிறவி எடுத்ததன் பெரும் பயன் என்று எண்ணுகிற அடிமைப்புத்தி படைத்தவர்கள் அல்ல. டில்லி குட்டக் குட்டக் குனிந்து கொடுத்து, ''மேலும் கொஞ்சம் குட்டுங்கள் மேலிடத்தோரே'' என்று சரணாகதிப் படலம் வாசிக்கின்ற முதுகெலும்பற்ற முத்தண்ணாக்களும் அல்ல. அவர்கள் சுதந்தர புருஷர்கள். தைரிய சுபாவம் படைத்தவர்கள்' எதிர்த்து நின்று ஏன் என்று கேட்கிற நெஞ்சு உறுதியும் நேர்மைப் பண்பும் வாய்ந்தவர்கள். டில்லி சொல்லிவிட்டால் என்ன—பணிந்தேதான் தீரவேண்டுமா—அதுதான் முடியாது என்று அஞ்சா நெஞ்சுடன் கூறுகின்ற அளவு நிமிர்ந்து நிற்கிற சிறந்த இயற்கை படைத்தவர்கள்.

ஆகையால்தான் அவர்கள், மைசூர் இராஜ்யத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற மைசூர் இராஜ்யத்தைச் சேர்ந்த ஒரு வழக்கை மைசூர் இராஜ்யத்தைச் சேராத வெளி மாகாணம் ஒன்றில்தான் விசாரித்தாகவேண்டுமென்று டில்லி ஜனாதிபதி கட்டளை பிறப்பித்ததைக்கண்ணுற்றதும், ''அதுதான் முடியாது'' என்று தெளிவான முறையிலேயும் உறுதியான குரலிலேயும் தெரிவித்து விட்டிருக்கிறார்கள்.

மைசூர் சட்ட மன்றத்தில், இந்தப் பிரச்னையைப்பற்றிய விவாதம் நடைபெற்றிருக்கிறது சென்ற கிழமை.

அந்தச் சமயத்தில் **மைசூர் முதல் அமைச்சர் கே. சி. ரெட்டி** எழுப்பியிருக்கிற சுதந்தரக் குரலைச் செவிமடுக்க நேர்ந்த எவரும், ''வாழ்க அவருடைய தைரிய உள்ளம்'' என்று வாய்விட்டுக்கூறி மனங்கிழ்

டுப் பாராட்டாமல் இருக்கமுடியாது.

"இந்த வழக்கு மைசூர் இராஜ்யத்தைச் சேர்ந்தது. மைசூர் இராஜ்யத்திலே நடைபெற்றதாகச் சொல்லப்படுகிற ஒரு குற்றத்தைப்பற்றி, மைசூர் இராஜ்ய போலீசாரால் தொடுக்கப்பட்டு, மைசூர் இராஜ்ய நீதிமன்றங்களால் விசாரிக்கப்பட்டு வருகிற ஒரு வழக்கு, இந்த வழக்கு.

"மைசூர் ராஜ்யத்தைச் சேர்ந்த ஒரு வழக்கு மைசூர் ராஜ்யத்திலேயே விசாரிக்கப் படுவதுதான் முறை என்று நமது மனச்சாட்சி தெரிவிக்கிறது.

"அந்த மனச்சாட்சியின் தீர்ப்புக்கு விரோதமாக நடந்து கொள்ளும் உத்தேசம் எனக்குச் சிறிதளவும் கிடையாது.

"நாம் போகும் பாதை சரியானதாக இருக்கிறது. அந்தப் பாதை சரியானதுதான் என்பதைப்பற்றி நமக்குத் தெளிவான உறுதியும் இருக்கிறது. இந்நிலையில் அந்தப்பாதையை விட்டுப் பிறழ்ந்து வேறுபாதையில் சென்று நம்முடைய மனச்சாட்சிக்கு விரோதமாக நாம் நடந்து கொள்வோமானால், நம்முடைய மைசூர் இராஜ்யத்திற்கு நாம் இழைக்கக்கூடிய துரோகம் அதைவிட வேறு இருக்கமுடியாது.

"எனவே, நான், ஜனாதிபதி பிரசாத் அவர்களின் கட்டளையை ஏற்று நடக்கப்போவது கிடையாது."

மைசூர் முதலமைச்சர் தோழர் கே. சி. ரெட்டியார் மைசூர் சட்டசபையில் எழுப்பியிருக்கிற வீர முழக்கமிது.

மைசூர் வழக்கொன்றை, "மைசூரை விட்டு வேறு ஏதாவது ஒரு மாகாணத்திற்கு மாற்று" என்று கட்டளையிட்டது டில்லி.

அந்தக் கட்டளை அநீதியானது— ஆகவே அதை ஏற்க முடியாது என்று அழுத்தந்திருத்தமாகக்கூறி விட்டார் அஞ்சாத நெஞ்சுடைய மைசூர் பிரதமர்.

மைசூர் பிரதமர் மட்டுமல்ல, அந்த இராஜ்யத்தின் சட்ட அமைச்சர் தோழர் பாஷ்யம் என்பவர் கூட, பிரதம மந்திரியைப்போலவேதான், டில்லியின் தாக்கிதுக்குத் தலைகுனிய முடியாது என்று தீர்த்துச் சொல்லியிருக்கிறார்.

"ஆண்டவன் நமக்கெல்லாம் அருளியிருக்கின்ற அறிவைக்கொண்டு நாம் ஒரு நேர்மையான முடிவுக்கு ஏற்கெனவே வந்திருக்கிறோம். அப்படி வந்தபிற்பாடு, கட்டளையைப் பிறப்பிப்பவர் யாராயிருந்தாலும் சரி, பிறப்பிக்கப்படும் கட்டளை எப்படிப்பட்டதாக இருந்தாலும் சரி, அந்தக் கட்டளை, நம்முடைய முடிவுக்கு மாறானதாக இருந்தால், அந்தக் கட்டளையை நிச்சயமாக என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது."

இந்த வாசகங்கள், மைசூர் சட்ட அமைச்சரின் இருதய கீதங்கள்.

மைசூரின் சட்டசபை உறுப்பினர்களும் சரி, மைசூரின் ஆட்சித் தலைவர்களும் சரி, டில்லியின் அநீதியான கட்டளையை ஏற்றுக்கொள்வது மைசூரின் தன்மானத்திற்கே வேட்டுவைக்கும் செயலாகும் என்பதைத் தெள்ளத்தெளிந்த முறையிலே, எல்லோருக்கும் விளங்கும் வகையிலே எடுத்துக்காட்டி விட்டனர்.

அதுமட்டுமல்ல.

மைசூர் முதலமைச்சர் தோழர் கே. சி. ரெட்டியார் டில்லிக்கே சென்றிருக்கிறார் இந்த வாரம்.

அவர் அங்கே சென்றிருப்பது, சென்னை அமைச்சர்களைப் போல, மேலிடத்தாரின் மேன்மை தங்கிய கால்களிலே விழுந்துபணிந்து, ஐயா ஒரு வரம் தாரும் என்று அடிமை மொழிகளைப் பேசிட அல்ல.

உங்கள் கட்டளை நேர்மை அற்றது—நீதிக்குப் புறம்பானது— மைசூரின் சுயமரியாதைக்கு இழுக்குத் தேடுவது—எங்களால் ஒத்துக் கொள்ள முடியாதது எங்கள் மக்களால் முற்றிலும் வெறுக்கப்படுகிறது என்றெல்லாம் மேலிடத்தாருக்குத் திட்டவட்டமாகத் தெரிவிக்கத்தான் அவர் அங்கே போயிருக்கிறார்.

ஒருக்கால் இனி அவரை டில்லி மிரட்டிடக்கூடும். இப்படியெல்லாம் நீங்கள் எங்கள் சொல்லைத் தட்டிநடக்கத் தொடங்கினால் பஞ்சாப் மாகாணத்தை ஜனாதிபதியே நேரடியாக ஆளத் தொடங்கிவிட்டதுபோல உங்கள் இராஜ்யத்தையும் ஆளும்படி செய்துவிடுவோம் என்று உருட்டு விழிகளைக் காட்டி அடக்குமுறை பதிகத்தை வாசிக்கக்கூடும். அந்தப் பயமுறுத்தல் பதிகத்துக்கு அஞ்சி, ஒருவேளை, தோழர் ரெட்டியார், உங்கள் சித்தம் என்றன் பாக்கியம் என்று தாழ்ந்து பணிந்திடும் நிலை உருவானாலும் உருவாகக்கூடும்.

இனி நேரிடக்கூடிய நிகழ்ச்சிகள் எப்படிப்பட்ட தன்மை படைத்தனவாக இருந்தபோதிலும், இதுவரை தோழர் ரெட்டியாரும் அவரைச் சார்ந்த ஏனைய அமைச்சர்களும் இந்தப் பிரச்சினையிலே காட்டியிருக்கிற தைரியத்தையும் திடநெஞ்சத்தையும் நாம் பாராட்டியே தீரவேண்டும்.

சென்னை காங்கிரஸ் அமைச்சர்கள் டில்லி இருக்கிற திக்கு நோக்கி அடிக்கடி சாஷ்டாங்க நமஸ்காரம் புரிந்துகொண்டிருக்கிற பரிதாபக் காட்சியைக் கண்டு மனவேதனை கொண்டிருக்கிற நம், மைசூர் ஆட்சியாளர்களின் இந்தத் தைரியமான போக்கைக்கண்டு எப்படி மகிழ்ச்சியடையாமல் இருக்க முடியும்?

இன்றையதினம், டில்லியில் உள்ள தர்பார் சுந்தரர்கள் குட்டக் குட்ட குனிந்து கொடுக்கிறது சென்னை சர்க்கார். ஆனால் நிமிர்ந்து நின்று, கூடாது இந்தக் கொடுமை என்று தீப்பொறி பறக்கப் பேசுகிறது மைசூர் சர்க்கார்.

ஆனால் ஒரு நாள் வர இருக்கிறது —அந்த நாளும், நாமெல்லாம் எதிர் பார்த்ததைவிட மிகவும் வேகமாகத்தான் வந்துகொண்டிருக்கிறது—அந்த நாளிலே, மைசூர் சர்க்கார் மட்டுமல்ல, தென்னாட்டில் உள்ள எல்லா சர்க்கார்களும், இந்த ஒரு பிரச்னையிலே மட்டுமல்ல எல்லாப் பிரச்சினைகளிலுமே, தென்னாட்டு ஆட்சியாளர்கள்மீது வடநாட்டு ஆதிக்கம் எதற்காக இருக்கவேண்டும் என்று உரத்த குரலில் உலகறியக் கேட்கத்தான் போகிறார்கள்.

வேறு வகையாகச் சொல்வதானால், திராவிடநாடு திராவிடருக்கே என்கிற இலட்சிய கீதத்தை தென்னாட்டு ஆட்சியாளர்கள் அத்தனை பேரும் ஒருமித்த குரலில் எழுப்பத்தான் போகிறார்கள்.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

னில் போய் எடுத்துப் பாரும் புறநானூற்றை.

“பல்சான்றீரே, பல் சான்றீரே செல்கெனச் சொல்லாது ஒழிக என விலக்கும் பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான்றீரே... நள்ளிரும் பொய்கையும் தீயும் ஓரற்றே” என்று கூறி பூதப் பாண்டியன் தேவித் தீப் பாய்ந்தாளே, அத்தகைய கற்புக்கரசிகள் தோன்றிய நாட்டினர் ‘விவாகரத்து’ என்று வீம்பு பேசுகிறாயா?

தன்னுடைய தலைவன் பிரிந்து செல்கிறான் என்பதைக் கேட்டவுடனேயே உயிர் துடிக்கும் பண்டைத் தமிழகத் தலைவியரைச் சித்தரிக்கும் திருக்குறளின் காமத்துப்பாலை மறந்துவிட்ட மறத்தமிழனே, வேண்டாம் இவ் விபரீதம்! விட்டு விடு இச் செயலை” என்று நமக்கு எடுத்துக்கூற தமிழன்பர்கள் சிலர் முன்வந்துவிடலாம். அவர்களைப் போற்றுகின்றோம் பண்டைத் தமிழகத்தின் நிலையை உணர்ந்திருப்பது கண்டு. ஆனால் இன்றைய நிலையையும் இடைக்கால நிலையையும் உணராதது கண்டு இரங்கத்தான் வேண்டியிருக்கிறது.

அவர்கட்கு ஓரே பதில், காலம் மாறிவிட்டது. ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு நடந்த கதையை—இல்லை—உண்மைத் தமிழர் வரலாற்றை நாம் மறந்துவிட வேண்டுமென்று சொல்லவில்லை. அந்தப் பண்டைத் தமிழரின் நிலை அதன்பின் இங்கு புகுந்த ஆரியக் கலாச்சாரத்தால் பழக்க வழக்கத்தால் குழிதோண்டிப் புதைக்கப்பட்டதையும் மறந்துவிடக்கூடாது. மறந்துவிடவும் முடியாது.

திருநீறு பூசி கையிலே ஜெப மாலை உருள வந்த சிவனடியாருடன் தன் மனைவியை அனுப்பிய இயற்பகைநாயனார் போன்றவர்களைப் போற்றித் துதிபாடும் பெரிய புராணம் கி. பி. 11ம் நூற்றாண்டிலும்; சீதையின் கொங்கையை சனீஸ்வரன் கோதிக்கொண்டு போனதையும், தமிழ்நாட்டுப் பெண்மணி தடாதகையின் உடல் உறுப்புக்களை அறுத் தெறிந்ததையும் புகழ்ந்து கூறும் இராமாயணம் கி. பி. 9ம் நூற்றாண்டிலும்; ஐந்து கணவர்களை மணந்தும் ஆறாவது கணவனை விரும்பிய தர்ம பத்தினியாம் திரௌபதையின் வரலாற்றைக் கூறி, ‘கற்பு’ என்பதற்கே பொருளில்லாமல் செய்த மகாபாரதமும், ஆற்றோரங்களிலும் குளக்கரையிலும் தெரு மூலைகளிலும் வீற்றிருந்து அங்கங்கு வரும் பெண்களையெல்லாம் கண்டு ரசித்து விவாகம் செய்துகொள்ளக் காத்திருக்கும் கயவர்களாகக் கடவுள்களை உண்டாக்கிய புராணங்கள் நூற்றுக் கணக்கிலேயும் இன்றைய வரையில் புகுந்து, தமிழருடைய பண்டை உயர் நிலையை நிலை குலையச் செய்ததை நாம் மறந்துவிட முடியுமா?

எனவே இடைக்காலத்திலே புகுந்த ஆரியப் பழக்க ஒழுக்கங்களினால் பண்டைத் தமிழரின் உயர்நிலை, பண்பட்ட பண்பு, வஞ்சகமில்லா வாழ்வு, நேர்மையான குணம், நீதிக்குக் கட்டுப்பட்ட நெஞ்சம் இவையெல்லாம் சங்ககால ஏட்டுச் சொல்லாக ஆகிவிட்டன. நாட்டிலே, நயவஞ்சகம், வால் அறுபட்ட நரிபோல் ஆடிற்று. காட்டில் காற்றெனப் பறந்து அச்சம் என்பதே அறியாமல் வாழ்ந்த அரிமா, கையிலே கமண்டலம் ஏந்திய பூனையின் உறுமலுக்கு அஞ்சி ஓடுகிறது.

.....................? தமிழரின் உயர்ந்த நாகரீகம் அழிந்துவிட்டது!

‘சோழவள நாடு சோறுடைத்து’ உண்மை, பண்டைத் தமிழகத்தில். ஆனால் இன்று களர் நிலமாகிவிட்டது அப் பொன்னாடு. மேனாட்டு மின் பொறி கொண்டு நெல்விளைத்தால்தான் அச்சொல்லை இன்று சோழநாட்டு மக்களின் உளத்தில் காண முடியும். அதுபோலவேதான் “காதல் மாதர் மகிழ்வுறும் நாடு நம் நாடு” இன்றல்ல, இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன். அக் காதல் வாழ்வை இன்று காணவேண்டுமானால் மேனாட்டு வழக்கத்தை—விவாகரத்துரிமையை—ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் மேனாட்டுப் பழக்க வழக்கங்கள் அத்தனையையும், அப்படியேஏற்றுக்கொள்ள வேண்டும் நாம், என்று கூறும் சிறுமதி எமக்கில்லை.

இன்றைய கண்ணகிகள், மாதவி வீட்டிலிருந்து திரும்பும் கோவலர்களை, அன்பு மொழியால் அழைத்து, அறுசுவை உணவு உவந்து இட்டு, கோகிலகான இசைபாடி, கொஞ்சும் சிலம்பை எடுத்துத் தந்து, “சென்றுவாரும் என் ஆருயிர் மணாளரே” என்று அனுப்ப மாட்டார்கள்.

“கைப்பிடித்து மாலையிட்டு, மணக்கோலம் கலைவதற்கு முன்பே சென்ற என் மணாளரே வாரும்! வாரும்!! உம் இச்சை தீருகிற வரையில் மாதவி வீட்டில் இருந்து விட்டு புதுச்சுவை பருகுவதற்காக இங்கு வருகிறீரா? வருக! வருக! உம் வரவு நல்வரவாகுக!! உம் இச்சைப்படி வேட்டையாட காட்டில் ஓடித் திரியும் மான்கள் கூட்டமல்ல நாங்கள். பகுத்தறிவு படைத்த மானிட இனத்திலே தோன்றிய தன்மானமுள்ள

பெண்கள். இன்று வீட்டை விட்டு வெளியில்நடவும்! நாளை என்னை வழக்கு மன்றத்திலே சந்தியும்." என்றுதான் கூறுவார்கள். ஆகவேதான் நாம் கூறுகிறோம், காலம் மாறிவிட்டது!

விவாக ரத்து பண்டைத் தமிழரின் பழக்கமில்லையே என்பதற்காக விலக்கிவிடுவது உகந்ததல்ல, பண்டைத் தமிழரின் பழக்கமில்லாத, பழக்கத்திற்கே விரோதமான பலவற்றை ஏற்றுக் கொண்டுள்ள நாம்.

காதல் மணத்தைக் காண முடியவில்லை இன்று. ஏன்?

"உன் மகள் காதலனிருக்கிறானே கந்தசாமி, அவன் படித்திருப்பது B A. தான். நான் பார்த்தவரன் யார் தெரியுமோ? ஈஸ்வரன் B E. இரு நூறு ரூபாய் சம்பளத்தில் வேலையும் பார்க்கிறான். கந்தசாமி ஏதோ கொஞ்சம் சிகப்பு. அது இந்த ஈஸ்வரனின் வாட்டசாட்டமான உடம்பிற்கு ஈடுகட்டமுடியுமோ? இவையெல்லாம் கிடக்கிறது. கந்தசாமி கீழ் சாதியாம்! அதற்கென்ன சொல்கிறாள் அந்தக் கழுதை? நான் ஈஸ்வரன் தந்தைக்கு வாக்கும் கொடுத்துவிட்டேன். இஷ்டப்பட்டவனை, இஷ்டப்படிதான் மணந்து கொள்வேன் என்று கூறுகிறாளே உன் காலேஜ் குமாரி! அவளிடம் இதை உறுதியாகச் சொல்லி விடு. இரண்டு நாட்களில் தானே ஒப்புக் கொள்ளாவிடில் அவளைக் கேட்காமல் தானே, ஈஸ்வரனுக்கு அவளைக் கட்டிக் கொடுத்து விடுவேன்"

என்று திமிராகத் தன் மனைவியிடம்சொல்லிவிட்டுத் துண்டை மேலே தூக்கிப் போட்டுக் கொண்டு அதோ செல்கிறாரே சீமான் சோம சுந்தரம் பிள்ளை. அவருடைய அத் திண்ணமான எண்ணத்திற்குச் சாவுமணி அடித்தால் தான் இந்நாட்டில் காதல் மணம் வளரமுடியும். அச் சாவுமணிதான் விவாக ரத்து.

திமிராகப் பேசினாரே பிள்ளை, அப்பொழுது, 'நீர் அவளின் அழுகை ஒலி கேட்காமல், இதயத் துடிப்பு வெளியில் தெரியாமல், மேளதாளத்தோடு திருமணம் செய்தாலும், நாளையே அவளுக்கு விவாகரத்து செய்து கொள்ள உரிமை இருக்கிறது" என்று அந்த் சாவுமணி அடித்திருக்குமானால், அவர்தான் அப்படி பேசியிருப்பாரா? அல்லது அதுபோன்ற திருமணங்கள் தான் இன்று நாட்டில் நடக்குமோ?

"வீடு போ போ என்கிறது, காடு வா வா என்கிறது" என்ற நிலையிலுள்ள கிழவர்களுக்குச் சீதனங் கொடுப்பது போல் கட்டிளங்குமரிகளைத் திருமணம் செய்ய அனுமதித்து, பொருந்தா மணங்களைக் கண்ணெதிரே கண்டும் காணாதவர் போல் இருந்துவிட்டு, "நாடு கெட்டுவிட்டது! விபசாரம் பெருகிவிட்டது!" என்று ஏதேதோ சொல்லி வீரவுரையாற்றுகிறோமே, அதற்கு, விவாகரத்துரிமை ஏற்பட்டால், நாட்டில், நாளாவட்டத்தில் வேலை இல்லாமலே போய்விடும்.

வெண்ணிலாவும் வானும் போல, வாளும் அதன் கூரும் போல, கண்ணும் அதன் ஒளியும் போல, கணவன் மனைவியர் காதல் வாழ்வு நடத்தும் சமுதாயத்தில் விவாக ரத்து தேவையில்லையே என்று பலர் நினைக்கலாம். ஆனால் அங்குங்கூட விவாகரத்துதேவைப்படத்தான் செய்கிறது. "திருமணம் நடந்தபோது நான் அவரை உள்ளன்போடு நேசித்தது உண்மைதான் ஆனால் அவர் இன்று தன் திருவிளையாடல்களினால் பெற்றிருக்கும் க்ஷய ரோகத்தை யானும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டுமா? என் பின் வரும் சந்ததிகளும் அவ்வியாதியால் அழியத்தான் வேண்டுமா?"

—இதற்கென்ன பதில் சொல்கிறீர்கள்? உயிருடன் போரிடுங் குழந்தையை இரவும் பகலும் கண் உறக்கமின்றிக் காப்பாற்றியதனால் உண்டாகிய க்ஷய ரோகத்தை ஏற்றுக் கொண்ட தாய் அதோ வருகிறாள், அதனை ஏற்றுக் கொள்ள மறுக்கிற இந்த ஆண்கள் சமுதாயத்தில், பழைமை க்ஷய ரோகம் பிடிக்காத எவரும், அவளுக்கு நிச்சயமாக விவாக ரத்து தேவைதான் என்பதை கூறித்தான் ஆக வேண்டும். மேனாடுகள் சிலவற்றை நோக்குபவர்கள், தொட்டதற்கெல்லாம் தப்பெடுத்து எதற்கெடுத்தாலும் விவாக ரத்து செய்யும் நிலை நம் நாட்டிலும் ஏற்படலாம் என்று அஞ்சி, விதவா விவாகம் செய்து கொள்ளவே மறுக்கும் இன்றைய வாலிபர்கள், விவாகரத்துசெய்து கொண்ட பெண்களை மணக்கத் துணிவார்களா? என்று கேட்கலாம். இந்தக் கேள்வி இன்றைய வாலிப உலகத்தை மாத்திரமல்ல இரஷ்யா போன்ற நாடுகளையும் மறந்து கேட்கப்பட்டிருக்கிறது. ரஷ்யாவில் விவாக ரத்துரிமை முதன் முதல் தரப்பட்டவுடன் விவாக ரத்து அதிகமாகத்தான் இருந்தது ஆனால் இன்றுவிவாகரத்து செய்துகொள்வது மிகமிக குறைந்துவிட்டது. விவாக ரத்துரிமைச் சட்டம் எடுத்தற்கெல்லாம் விவாக ரத்து செய்து கொள்ள உரிமை தராது. விவாக ரத்து செய்து கொண்டால்தான் வாழ முடியும் என்ற நிலை ஏற்பட்டால் மட்டுமே விவாக ரத்து அனுமதி தரப்படும்.

(18-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கூர்மையும் இருந்தால், பற்பல திட்டங்களைத் தீட்டி, நாட்டு மக்களின் நலிவுகளை நிச்சயம் போக்க முடியும்.

ஆனால் அவரோ திட்டங்கள் தீட்டி மக்களின் துயரங்களைத் தீர்ப்பதற்குப் பதிலாக, உண்ணாவிரதம் இருப்பேன் — ஓயாது பிரார்த்தனை புரிவேன் என்று கூறிக்கொண்டே, தவறான பாதையில் தடதடவென்று நடந்து செல்கிறார்.

மக்களின் துயரங்களைத் தீர்ப்பதற்கு உண்ணாவிரதம், பிரார்த்தனை, ஆகிய இரண்டு வழிகள்தான் இவருக்குத் தெரியும் என்று சொன்னால், இதற்கு, இவர், மாகாணத்தின் மந்திரியாக இருக்கவேண்டிய அவசியம் இல்லையே! ஏதாவது ஒரு பிள்ளையார் கோயிலில் பூஜாரியாக இருந்தால் போதுமே! இதற்கு ஒரு மந்திரி சபை இருக்கவேண்டிய கட்டாயமும் கிடையாதே— ஏதாவது ஒரு பஜனை மடம் மட்டும் இருந்தால் போதுமே!

உண்ணாவிரதம், பிரார்த்தனை, இந்த இரண்டு முறைகள் மூலம் தான் மக்களின் வேதனைகள் யாவும் போக்கப் படவேண்டுமென்றால், அந்தக் காரியத்தைப் புரிய ஊருக்கு ஊர் ஒன்பது பூஜாரிகளை நியமித்துவிட்டால் காரியம் ஜாம் ஜாமென்று நடைபெறுமே! இந்தக் காரியம் புரிய ஒன்பது பத்து மந்திரிகள் ஏன்— அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆயிரம் இரண்டாயிரம் என்று சம்பளமேன்? மாதச்சம்பளம் ரூபா ஐந்து கொடுத்தால் கூடப் போதுமே, கோயில் பூஜாரிகள் பலர் இந்தக் காரியம் புரிய தயார்—தயார் என்று விரைந்தோடி வருவோர்களே நிச்சயமாக! அப்படிச் செய்தால் அமைச்சர்களுக்கு அள்ளிக்கொடுக்கிற பணத்திற்குப் பணமும் மிச்சமாகும். வெறும் பூஜாரிகளா இந்த நாட்டில் அமைச்சர்களாக வீற்றிருக்கிறார்கள் என்கிற பழிச்சொல்லுக்குப் பழிச்சொல்லும் மிச்சமாகுமே!

தங்கள் துயரங்களை நிச்சயம் தீர்த்து வைப்பார்கள் என்று ஆவலோடு எண்ணிக் கொண்டு, மக்கள் இந்தக் காங்கிரஸ் தலைவர்களை, மந்திரி பீடத்தில் உட்கார வைத்திருக்கிறார்கள். ஆனால் இந்தக் காங்கிரஸ் தலைவர்களோ, மந்திரி பீடங்களை வெறும் பஜனைக் கூடங்களாக மாற்றி அமைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

நியாயமா இது?—நாமல்ல கேட்பது-மக்கள்!

வரிகளைக் குறைக்க நிர்வாண ஊர்வலம் மேற்கொள்ளும் ஜெர்ரி கோபர்ன்கள்—அமெரிக்காவில்!

மக்களின் துயரங்களைத் தீர்க்க உண்ணாவிரதமிருக்கும் நிக்கோல்ஸ் ராய்கள்—இந்தியாவில்!

இந்த இருவகைக் காட்சிகளும் வேடிக்கையானவை மட்டுமல்ல வேதனை மிகுந்தவையும் ஆகும்.

நாகரிக ஒளி மனித சமுதாயத்தில் வீசாத காலத்தில் இருந்திருக்க வேண்டிய காட்சிகள் இவை. ஆனால் ஏனோ தெரியவில்லை, இந்த இருபதாம் நூற்றாண்டிலே, அமெரிக்கா, இந்தியா, இரண்டு இடங்களிலும் ஏக காலத்தில் காணப்படுகின்றன இந்தக் காட்சிகள்.

மனித சமுதாயம் முன்னேற்றம் அடையவேண்டுமானால் இத்தகைய காட்டுமிராண்டிக் காட்சிகள் நாட்டிலே தோன்றாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டியது நல்லறிவாளர்கள் அனைவருடைய கடமையாகும்.

பொதுவாக நம் நாடு, குறிப்பாக காங்கிரஸ் கட்சி, பூஜாரிகளாக இருக்கவேண்டிய பூஜ்யர்களை நாட்டின் அமைச்சர்களாக உயர்த்தி வைக்கும் உதவாக்கரை மனப்போக்கை இனியாவது விட்டுத் தொலைத்தாக வேண்டும். விட்டுத் தொலைத்தால்தான், நாடு நலமடையும். மக்கள் இன்பமெய்துவர். சமுதாயம் சிறந்த நிலையை எட்டிப் பிடிக்கும். புதுவாழ்வு, முழுவாழ்வு, நல்வாழ்வு, என்றெல்லாம் சொல்லப்படுகிற நல்ல நிலைமை இந்தியாவில் உருவாகும்.

மதுரையில் நிதியளிப்பு விழா

தி. மு. கழக மாநில மாநாட்டுக்காக, மதுரை, இராமநாதபுரம், நெல்லை மாவட்டங்களின் நிதியளிப்பு விழா 18-11-51 ஞாயிறு காலை 8-30 மணிக்கு மதுரை, மீனாட்சி டாக்கிசில் நடைபெறும்.

தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அறிஞர் சி. என். அண்ணாதுரை அவர்களும், இயக்கப் பேச்சாளர்கள் பலரும் சொற்பொழிவாற்றுவர்.

கூட்ட ஆரம்பத்தில் புதுக்கோட்டை தோழியர் P.S. செல்வா அவர்கள் சௌந்திரராசன் பின்னணிக் குழுவினருடன் இயக்கப் பாடல்கள் பாடுவார்.

மதுரை மாவட்ட தி. மு. கழகம்.

திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்,

11—11—51 ஞாயிறு காலை 8 மணிக்குச் சென்னை ஒற்றைவாடை நாடகக் கொட்டகையில் தோழியா சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் தலைமையில், எங்கள் திருமணம் நடைபெறும. அவ்வமயம், தோழர்கள் க. அன்பழகன் எம். ஏ., காஞ்சி மணிமொழியார், என். வி. நடராசன், கவிஞர் கண்ணதாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். தாங்கள் தவறாமல் வந்து எங்களை வாழ்த்த வேண்டுகிறோம்.

இங்ஙனம்,
பு. வி. கௌரி,
வி. மோகனன்.

சிந்தனைக்கு விருந்து

நமது சர்க்கார் வருஷத்திற்கு ஒரு அவுன்ஸ்வீதம் அரிசி ரேஷனைக் குறைத்துக்கொண்டு வருவதால் ஐந்து வருடத்திற்குப்பின் அரிசியே கொடுக்கவேண்டியிருக்காது.

—பி கோவிந்தமேனன்

ஐந்து வருடத்திற்குள்ளாகக் கல்லையும் மண்ணையும் காய்ச்சிக் குடிக்கும் வித்தையை மக்களுக்குக் கற்பிக்க நூதன பயிற்சிக் கூடங்களை ஏற்படுத்தும் திட்டம் ஒன்றை சர்க்கார் கொண்டு வருமென நம்புகிறோம்.

* * *

நறுக்கென அறுக்கும் ரேஸர் பிளேடுக்குள்ள ராஜாஜீயின் கூர்மையான நுண்ணறிவு கொண்டு நாடு பயனடையுமென நம்புகிறோம்.

—ஜவகர்

ரேசரின் கூர்மை நல்லவர்கட்கும் கெட்டவர்கட்கும் வெவ்வேறுவிதமாகப் பயன்படுகிறது. ராஜாஜியின் நுண்ணறிவு அவ்வாறின்றி நல்லதற்கு மட்டும் பயன்படவேண்டுமே என்பது பலரது கவலை.

* * *

இந்திய மக்களின் வாழ்க்கையிலும் மனோபாவத்திலும் மதம் இல்லாமலிருக்க முடியாது. கல்வித் திட்டத்திலிருந்து தெரிந்தோ தெரியாமலோ மதத்தை ஒழித்தால் விபரீதமே விளையும்

—பிரதம நீதிபதி ராஜமன்னார்

மதத்தை ஒழித்துக் கட்டிய நாடுகள் உலகத்தில் பல இருக்கின்றன. அங்கு விபரீதம் ஒன்றும் விளையவில்லை. மாறாக இன்பமும் மகிழ்ச்சியும் பொங்கித் ததும்பிப் பூரணமாய் வழிவதை நீதிபதி உணராததுதான் விபரீதமாக இருக்கிறது.

* * *

நமது சர்க்கார் வருடத்திற்கு ஒரு அவுன்ஸ் வீதம் அரிசி ரேஷனைக் குறைத்துக் கொண்டு வருவதால் ஐந்து வருடத்திற்குப்பின் அரிசியே கொடுக்க வேண்டியிருக்காது.

—பி. கோவிந்தமேனன்
சட்டசபைப் பேச்சு

அதற்குள்ளாக கல்லையும் மண்ணையும் காய்ச்சிக் குடிக்கும் வித்தையை மக்களுக்குக் கற்பிக்க நூதன பயிற்சிக் கூடங்களை சர்க்கார் அமைக்குமென நம்புகிறோம்.

* * *

நாணயமும், திறமையும், உன்னத லட்சியங்களும் உள்ளோருக்கே ஜனங்கள் ஓட்டுப்போட வேண்டும்.

—பிரதமர் நேரு

காங்கிரஸ் அபேட்சகர்களுக்கு ஓட்டுப் போடாதீர்கள் என்பது தான் இதன் தெளிவான பொருள் என அரசியல் அகராதி அறிவிக்கிறது. ஏனென்றால், காங்கிரஸ் அபேட்சகர்களைப் பொறுக்குவதில் இவை கவனிக்கப்படாமல் பணமும் ஜாதியுமே கவனிக்கப்பட்டதென காமராஜர் கண்ணியமாக ஒப்புக்கொண்ட பிறகு நாணயமும், திறமையும் லட்சியமும் எப்படி காங்கிரஸ் அபேட்சகரிடம் எதிர்பார்க்க முடியும் என அந்த அரசியல் அகராதி விளக்கமும் தருகிறது.

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் சுமையாக ஆகிவிடும். இப்போதே பிச்சைக்காரர்கள் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. மேலும் அது அதிகரிக்காமலிருக்க, தொத்துநோய்கள் பரவவாமலிருக்க மரணவிகிதம் குறைய, இப்போது முதலே தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இல்லையேல் அதிவிரைவில் கேடுகள் மலிந்து மக்கள் வாழ்வுக்கு இடையூறுகள் தோன்றலாம்.

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

விவாகரத்து ஒரு விளையாட்டல்ல, அது விஞ்ஞானம் போன்றது. நன்மைக்கே அதை பயன்படுத்துவது நம் பொறுப்பு. ராஜா ராம் மோகன் ராய், மணந்தவன் மாண்டபின் விதவை உயிருடனிருந்து படும் அவஸ்தையின் துடிப்பை நினைத்து, உயிருடன் தீயில் குதித்து துடிதுடித்திடும் உடன்கட்டை யேறும் வழக்கத்தை ஒழிக்காமல் 'சும்மா' யிருந்திருப்பாரானால், அது எவ்வளவு கொடுமையோ அதைவிட எள்ளளவும் கொடுமை குறைந்ததன்று, சில பெண்களின் வேதனையை விவாகரத்து அறிமுகப்படுத்தலாம் என்று கூறி நாம் சும்மாயிருப்பது.

ஆகவே ஆணுக்கொரு 'நீதியும்' பெண்ணுக்கொரு நீதியும் தரும், இன்றைய சமூகத்தைத் தலைகீழாக மாற்றியமைக்க, விவாகரத்துரிமை, "கூண்டுப் பறவையே சிறகை விரி, எழு, பற! பூட்டிய இரும்புக் கூட்டின் கதவு திறக்கப்பட்டது, சிறைத்தையே வெளியில் வா!" என பெண்கள்சமூகத்தை அழைப்பதைக்கண்டு பழமை விரும்பிகள் பரிதவிப்பதில் ஆச்சரியமில்லை.

"போர்வாள்"
சந்தா விவரம்

★

ஓராண்டு	ரூ. 6 80
6 மாதம்	ரூ. 3 40

போர்வாள் அலுவலகம்
பவழக்காரத் தெரு,
சென்னை 1.

வாடப் பிறந்தார்...?

[நா. நிலத்தலைவன்]

செவ்வாய்க்கிழமை மாலை சென்னை அரண்மனைக்கார தெருவில் உள்ள செயின்ட்மேரிஸ் சர்ச்சுக்கு அருகில் செல்பவர்கள் விதவிதமான பிச்சைக்காரர்களையும், அங்கம் இழந்தோரையும், அவதிக்கு உள்ளாகி அன்னப்பிச்சை கேட்பவர்களையும் பார்க்கலாம். அப்பரிதாபக் காட்சியைக் கண்டு பதைக்காதவர் இருக்கமுடியாது. தெருவின் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனை வரை வரிசையாக உட்கார்ந்திருக்கும் அந்த வாழ் விழந்தவர்கள் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டு வருகிறதே ஒழிய குறைவதாகக் காணோம். மாதா கோயிலுக்குச்செல்பவர்கள் காலணாவோ அரையணாவோ தருவதால், அங்கு பிச்சைக்காரர் கூடுகின்றனர். அவர்கள் அருகே செல்லும் மற்றவர்களுக்கு நோய் தொத்திக் கொள்கிறது. அதிலும் குஷ்டரோகம் போன்ற வெகு எளிதில் தொத்திக்கொள்ளும் நோய்கள் பலரையும் பிடித்து மரணத்தின் எண்ணிக்கையை அதிகப்படுத்துகின்றன.

அரண்மனைக்காரன் தெருவில் மட்டுமல்ல, வேறு எந்த ஆலயத்தின் அருகிலும் இத்தகைய பிச்சைக்காரர்கள் இருப்பதைக் காணலாம். சைனாபஜார் வீதியில் குடும்பம் குடும்பமாகப் பிச்சை எடுக்கும் காட்சி எவர் இதயத்தையும் உருக வைக்காமல் இருக்காது. சென்ட்ரல் ஸ்டேஷன் சுற்றுப் புறங்களில் பலவிதமான பிச்சைக்காரர்களைக் காணலாம். பஸ் நிலயங்கள் அருகே பிச்சைக்காரர்கள் போவோர் வருவோருக்கு இடையூறு செய்த வண்ணம் நடைபாதையில் அமர்ந்து பிச்சை எடுப்பதையும் காணலாம். மற்றும் திருத்தணி, திருப்பதி போன்ற 'க்ஷேத்திரங்களில்' நூற்றுக்கணக்கான பிச்சைக்காரர்கள் படிக்கட்டுகள் தோறும் உட்கார்ந்து பரந்தாமன் பெயர் கூறிப் பிச்சை எடுக்கிற பரிதாபத்தையும் பார்க்கலாம்,

சமீப காலத்தில் பிச்சைக்காரர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது என்பதை எவராலும் மறுக்கமுடியாது. உண்மையைக் கூறினால், காங்கிரஸ் ஆட்சிப்பீடம் ஏறிய பிறகு பிச்சைக்காரர் எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்திருக்கிறது என்பது சிறிய குற்றச்சாட்டு அல்ல. எவரும் தட்டிக் கழிக்க முடியாத ஒரு பெரும் குற்றச்சாட்டு. கேவலம் பிச்சைக்காரர்களின் பிரச்னையைக்கூட காங்கிரஸ் ஆட்சி தீர்க்க முடியவில்லை என்று குற்றம் சாட்டுவது வீண் எதிர்ப்புக்காகவோ வெறும் பழி சுமத்தவோ அல்ல. விலைவாசிகள் உயர்வாலும், நூல் பஞ்சத்தாலும் பிச்சைக்காரர்கள் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. விலைவாசிகள் விஷம்போல் எட்டமுடியாத உயரத்திற்குப் போவதை இந்த 'உத்தமர்கள்' பார்த்துக் கொண்டுதானிருந்தார்கள். நூல் பஞ்சமும் இவர்கள் தவறுகளினால் உற்பத்தியானதுதான். உணவுப் பஞ்சத்தைப்பற்றி உரைக்கவேண்டியது அவசியமில்லை. ஆகவே இந்த ஆட்சியினரின் தவறுகளுக்குச் சிகரம் வைத்ததுபோல் பிச்சைக்காரர் பிரச்னைதீர்க்க முடியாத பெரும் சிக்கலாகிவிட்டது.

பிச்சைக்காரர் எண்ணிக்கை பெருகுவதால், நோய்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது; மரண விகிதம் அதிகரிக்கிறது; ஆஸ்பத்திரிகளுக்கு வேலை அதிகரிக்கிறது. பணம் அதிகம் தேவைப்படுகிறது ....பிச்சைக்காரர்கள் எண்ணிக்கையை முளையிலேயேகுறைப்பதால் இவ்வளவு பண விரயத்தையும்; மரண விகிதத்தையும் குறைக்கலாம். ஆனால் தும்பைவிட்டு வாலைப் பிடிப்பதையே தொழிலாகக் கொண்ட இந்தத் தூயோர் ஆட்சி, பிச்சைக்காரர் எண்ணிக்கை அதிகரிப்பதைப் பார்த்துக் கொண்டுதானிருக்கிறது. இதுவரை ஒருவிதமான முயற்சியும் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. எடுத்துக்கொண்ட ஒரு சில முயற்சிகளும் முற்றும் பயன்தரவில்லை.

பிச்சைக்காரர் பிரச்னையை ஒழிக்கப் பலவிதமான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன, மேலை நாடுகளில். அங்கே பிச்சை எடுப்பது சட்டப்படி குற்றமாகும். பிச்சை எடுப்பவர்கள் எண்ணிக்கை ஒரு சிறு அளவுதான் இருக்கும். அவர்களையும் காப்பாற்றவேண்டி ஆங்காங்கு பிச்சைக்காரர் விடுதிகள் இருக்கும். மேனாடுகளில் பிச்சைக்காரர்களில் பெரும்பாலோர் உடல் உரம் இல்லாதவர்கள் அங்கம் இழந்தவர்கள் முதலானோர்தான் இருப்பார்கள். ஆனால் நம் நாட்டிலோ பிச்சை எடுப்பதே ஒருதொழிலாகிவிட்டது. காலை வேளையில் கூலிவேலை செய்யும் பலர், இரவில் மாறுவேடம் பூண்டு பிச்சை எடுப்பதைப் பலர் கண்டிருக்கலாம். பிச்சை எடுப்பதால் மூட்டை சுமக்கிற கூலியை விட அதிகக்கூலி கிடைக்கிறதாம்! பிச்சை போடுவதால் புண்ணியம் கிடைக்கும் என்ற மக்கள் மூடபுத்தியாலும், பாத்திர மறிந்து பிச்சை இடாததாலும், இம்மாதிரி வேஷக்காரர்கள் எல்லாம் பிச்சை மூலம் நன்கு சம்பாதிக்கிறார்கள்; அதனால் அவர்கள் தாங்கள் உழைத்துக் கஷ்டப்பட்டு சம்பாதிப்பதைவிட, உழைக்காமலே, உட்கார்ந்த இடத்திலே நிறையப்பணம் பெற நினைக்கிறார்கள்; அதனால் உண்மைப் பிச்சைக்காரர்களுக்குக் கிடைக்கக் கூடிய பணம், போலிகளுக்குக் [illegible] கிடைக்கிறது.

மைசூரில் பிச்சை எடுப்பது சட்டப்படி குற்றமாகிவிட்டது. அங்கே பிச்சைக்காரர்களுக்காக விடுதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, பிச்சை எடுப்பது குற்றம் என்ற சட்டம் வெற்றிகரமாக வேலை செய்யும் என நம்பலாம். பிச்சைக்காரர்களைக் காப்பாற்ற வசதியும், பணமும் இருந்தால் ஒழிய விடுதிகள் அமைக்க முடியாது; விடுதிகள் இல்லாமல், பிச்சையெடுப்பது குற்றம் என்று சட்டமியற்றுவதால் நினைத்த பலன் கிட்டாது. என்ன செய்யவேண்டும் பிறகு?

ஆங்காங்கு பிச்சைக்காரர்களைக் காப்பாற்ற வேண்டிய வசதிகள் அமைக்கவேண்டும். உண்மையி

லேயே உழைக்க முடியாதவர்கள் தான் இத்தகைய விடுதிகளில் சேர்க்கப்படவேண்டும். நோய் வாய்ப்பட்டவர்கள் அங்கமிழந்தவர்கள் முதலியோருக்குத்தான் இவ்விடுதிகளில் உணவும், உடையும் அளிக்கப்படவேண்டும். நோய் வாய்ப்பட்ட பிச்சைக்காரர்கள் மற்றவர்களுடன் நெருங்காமலும், தங்கள் நோய்களைப் பரவவிடாமலும் இருக்கத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். ஒவ்வொரு விதமான பிச்சைக்காரர்களுக்கும் தனித்தனியே விடுதிகள் அமைக்கப்படவேண்டும்.

இங்கிலாந்தில் எலிஸபெத் காலத்தில் பிச்சைக்காரர்களை மூன்று வகையாகப் பிரித்தார்கள். (1) உழைக்கக்கூடியவர்கள், ஆனால் வேலை இல்லாததால் பிச்சை எடுப்பவர்கள். (2) உழைக்கக் கூடியவர்கள். ஆனால் உழைக்க மறுத்த சோம்பேறிகள். (3) உழைக்க முடியாத நோயாளிகள், அங்கமிழந்தோர். முதல்வகைப் பிச்சைக்காரர்களுக்கு அங்கங்கே வேலை தேடிக் கொடுத்தார்கள். இரண்டாம் வகைப் பிச்சைக்காரர்களைச் சவுக்கால் அடித்து, உழைக்கும்படிக் கட்டாயப்படுத்தினார்கள். மூன்றுவது வகைப் பிச்சைக்காரர்களுக்கு விடுதிகள் அமைத்துத்தந்து; உதவினார்கள்.

1547ல் ஆறுவது எட்வர்ட் காலத்தில் ஒருவன் வேலையின்றி ஊர் சுற்றிக் கொண்டிருப்பதாகத் தெரிந்தால் 'ஊர்சுற்றி' (Vagabond) என்ற அட்டையை அவன் கழுத்தில் ஒட்டி [illegible] அவன் [illegible]. அவன் [illegible]யாக இரு ஆண்டுகளாவது அடிமைபோல் வேலை செய்தாகவேண்டும். ரொட்டி, தண்ணீர், சிறிது மாமிசம் இவையே அவனுக்கு அளிக்கப்படும். அவன் மீண்டும் ஏதாவது குற்றம் செய்ததாகத் தெரிந்தால் 'அடிமை' (Slave) என்ற அட்டை அவன் கழுத்தைச் சுற்றிக் கட்டப்படும். வாழ்நாள் முழுதும் அவன் அடிமையாக இருக்கவேண்டும்.

சில ஆண்டுகள் கழித்து மாதா கோயில்களில் பிச்சைக்காரர்களுக்காகப் பணம் வசூலிக்கப்பட்டு, அவர்களிடையே வழங்கப்பட்டது. சில சமயங்களில் பிச்சைக்காரர் வரி என்ற பெயரில் ஒரு சிறு தொகை எல்லோரிடமிருந்தும் வசூலிக்கப்பட்டது.

1601ல் செய்த சட்டப்படி ஒவ்வொரு வட்டமும் (Parish) அங்கு இருந்த பிச்சைக்காரர்களைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பு பெற்றது. உழைக்க முடியாதவர்களுக்கு உணவும் உடையும் தரவேண்டிய பொறுப்பும், உழைக்கக் கூடியவர்களுக்கு வேலை தேடிக் கொடுக்க வேண்டிய பொறுப்பும் பெற்றன. சோம்பேறிகள் கட்டாயப்படுத்தி வேலை வாங்கப்பட்டார்கள்.

1722ல் வேலை நிலையச்சட்டம் (Workhouse Act) அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. அதன்படி ஆங்காங்கு வேலை செய்வதற்காக விடுதிகள் ஏற்படுத்தப்பட்டன.

1775ல் ஸ்பீன் ஹாம்லாந்து சட்டப்படி, ஒவ்வொரு பிச்சைக்காரர்களுக்கும் அலவன்ஸ் தர முடிவாகியது. பிச்சைக்காரர்கள் மட்டுமின்றி தரித்திரர்களுக்கும் கொடுக்கப்பட்டது.

1834ல் ஏழைகள் சட்டத்திருத்தம் கொண்டுவரப் பட்டது. அதன்படி ஏழைகளைக் காப்பாற்றவேண்டிய கடமை கமிஷனர்களிடம் (Poor-law Commissioners) ஒப்படைக்கப் பட்டது, வட்டங்கள் ஒன்று படுத்தப்பட்டன, பாதுகாவலர்கள் குழு (Board of Guardians) ஏற்படுத்தப்பட்டன. அவை ஆங்காங்கு பிச்சைக்காரர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு பெற்றன.

பிற்காலத்தில் அதாவது—இந்த நூற்றாண்டில் பலவித தொழில் ஸ்தாபனங்களும், கிழவயது இன்ஷ் [illegible] யூரன்ஸ், நோய் எதிர்ப்பு இன்ஷ்யூரன்ஸ் முதலான பல நன்மைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளினால் பிச்சைக்காரர்கள் தொகை பெரிதும் குறைந்திருக்கிறது.

இங்ஙனம் இங்கிலாந்தில் பிச்சைக்காரர்கள் ஒழிப்பு வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது. இவைகளைப் பின்பற்றி நம் நாட்டிலும் தக்க முயற்சிகள் எடுக்கப்படல் வேண்டும்.

முதலாவதாகக் குஷ்டரோகம் போன்ற தொத்து நோய் உடைய பிச்சைக்காரர்களை அப்புறப்படுத்தி அவர்களுக்காகத் தனி விடுதிகள் கட்டப்பட்டு அங்கே அவர்கள் பராமரிக்கப்படவேண்டும். அவர்கள் மற்ற பிச்சைக்காரர்களுடன் தொடர்பு கொள்ளாதபடிப் பார்த்துக் கொள்ளவேண்டும்.

"இந்தியாவில் பிச்சைக்காரர்கள் கூட மணந்து கொள்கிறார்கள்." என்று ஓர் ஆங்கிலேயர் கண்டறிந்து பிரமித்துப் போனாராம்!...... பிச்சைக்காரர்கள் கல்யாணம் செய்து கொள்வதால், தங்களிடம் உள்ள நோய்களை மனைமார்களுக்கும் 'ஆஸ்தி'யாக்கி விடுகிறார்கள்! இதனால் பிச்சைக்காரர்கள் எண்ணிக்கையும், நோய்களும் அதிகரிக்கின்றன.

அமெரிக்காவில் மார்கரெட் ஜூகர் (Margaret Juker) என்ற விபசாரியின் மூலம் தொத்துநோய் பரவி, அவளது பரம்பரையில் 'அவதரித்த' இருநூறு பேர் திருடர்களாகவும், சோம்பறிகளாகவும் சிறையில் வாழ்ந்து வந்த வரலாற்றை எச். ஸ்பென்ஸர் என்பவர் குறிப்பிடுகிறார். பிச்சைக்காரர்கள் மணம் புரிந்து கொள்வதால் ஏற்படும் கேடுகளுக்கு இதுவே தக்க சான்றாகும்.

உழைக்கக்கூடிய பிச்சைக்காரர்களை வேறுபடுத்தி, அவர்களுக்கு எங்காவது, எப்படியாவது வேலை வாங்கிக் கொடுக்கவேண்டும். இதனால் பிச்சைக்காரர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவு குறையும்.

பொது மக்கள் கூடும் இடங்களான கோயில்கள், பஸ்நிலயங்கள் தியேட்டர்கள் முதலான இடங்களில் பிச்சைக்காரர்கள் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

பிச்சைக்காரர்களுக்கு மேற்குறித்த உதவிபுரிவதற்காகப்பணம் [illegible] வரி போடுவதன் மூலமாகவும், [illegible]ம் போன்றவைகள் மூலமாகவும், அரசாங்க உதவியின் மூலமும் பெற்றுக் கொண்டு சிறந்த முறையில் ஆக்க வேலைகள் செய்யலாம். இவை எல்லாம் செய்து முடித்த பிறகு பிச்சையெடுப்பது சட்டப்படி குற்றமாகும் என்று சட்டமியற்ற வேண்டும். அப்போது தான் அச்சட்டம் வெற்றிகரமாக வேலை செய்யும்.

இவ்வாறு பிச்சைக்காரர் பிரச்னையை ஒழிக்கத் தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டும். இன்னும் காலம் தாழ்த்தினால் பிச்சைக்காரர்கள் பிரச்னை தீர்க்க முடியாத

(13-ம் பக்கம் பார்க்க)

மாநில மாநாடு

ஒரு வேண்டுகோள்

நமது மாவட்டங்கள் பற்றிய சகல விபரங்களையும் காட்டும் பற்பல வரைப்படங்கள் (Maps) மாநில மாநாட்டுக் கண்காட்சியில் ஓர் குறிப்பிடத்தக்க அம்சமாக விளங்கும்.

இதற்கான வரைப் படங்கள், தனிச்செலவில், அதற்கான நிபுணர்களைக் கொண்டு சிறந்த வகையில் தயாரிக்கப்பட்டு வருகிறது.

அந்தந்த மாவட்டத்தில் உற்பத்தியாகும் உணவுப் பொருள்கள், புதை பொருள்கள், எடுக்கப்பட வேண்டிய சுரங்கச் செல்வங்கள் இரும்பு, நிலக்கரி, அல்மோனியம், மாக்னசைட் மற்றும் தாதுப் பொருள்கள், மலைகளிலும் காடுகளிலும் உள்ள செல்வங்களான—சந்தனம், அரக்கு, ரப்பர், தேன், காபி, டீ, ஏலம், கிரும்பு, மிளகு, ஜாதிக்காய் முதலிய பற்பல பொருள்களையும் கடலில் கிடைக்கக் கூடிய பலவித மண், உப்பு, கிளிஞ்சல், சங்கு, முத்து முதலானவைகளையும் நமது கண்காட்சியில் சேகரித்துக் காட்டவும், முயற்சிக்கப்படுகிறது.

இந்த முயற்சியை வெற்றிகரமாக்க அந்தந்த மாவட்டத் தோழர்களின் ஒத்துழைப்பு மிக மிக அவசியம். ஒவ்வொரு உள்ளூர் கிளைக் கழகங்களும், இது பற்றிய ஆலோசனைகளையும், பொருள்களையும் அனுப்பி வைத்து உதவுவது, மன மகிழ்வோடு வரவேற்கப்படும்.

பல கிளைக் கழகங்களும் முக்கிய முன்னணி வீரர்களும் தத்தமது பகுதிகளில் கிடைக்கும் நெல் முதலாய விவசாயப் பொருள்களைச் சேகரித்துக் கொண்டுள்ளதாக எழுதியுள்ளனர்.

நமது கண்காட்சி ஒரு அறிவுக் கோயில்!
அதை வெற்றியாக்குவது நமது கடன்!!

தோழர்கள் கீழ்க்கண்ட முகவரியோடு தொடர்பு கொண்டு, தங்கள் பகுதிகளில் கிடைக்கும் பொருள்கள் பற்றிய தகவல்களை அனுப்ப வேண்டுகிறோம்.

பொருள்களை, அனுப்பி, உதவுவார்களேயானால் அது மிக மிக வரவேற்கக் கூடியதாகும்.

கண்காட்சி,
தி. மு. க. மாநில மாநாடு, காஞ்சீபுரம்.

தித்திக்கும் செந்தமிழ்ச் சுவடிகள்!

★

இந்திய அரசியல் திட்டம்	2	)
தமிழன் தொடுத்த போர்	1	12
சரிந்த சாம்ராஜ்யம்	0	10
அறிஞர் அண்ணாதுரை	0	3
ஈரோட்டுப் பாதை	0	6
இன்பக் கடல் (பாரதிதாசன்)	1	0
கழைக்கூத்தியின் காதல் ,,	1	0
திரு. வி. க. மணிமடல்	1	12
அதிசய நிராகிகள்	0	12
காரல் மார்க்ஸ்	0	12
ஆலையூரார் உபதேசம் (அண்ணா)	0	12
இரத்த வெள்ளம்	0	8
மல்லிகா	0	8
வஞ்சகி	0	8
இன்ப இரவு	0	8
மனைவி மாற்றம்	0	8
எதிர்ப்பிலே வளர்ந்த இயக்கம்	0	8
லீலா ராணி	0	8
கள்ளக்கோழி	0	8
கலிங்கத்து இளவரசி	0	8
கன்னியின் சபதம்	0	8
தாயும் சேயும்	0	8
இன்பத்தின் எல்லை	1	0
என் மகள் (சேரன்)	1	0
வியர்வை விருந்து	0	6
பேசும் புறாக்கள்	0	8
கலைக்கோயிலா விபசார விடுதியா	0	4
கோயில் பெருச்சாளிகள்	0	6
அகப்பட்டான் ஹரிஹரதாஸ்	0	4
பைத்தியக்காரி	0	6
குமாரி செல்வா	0	6
ஊருக்கு உழைத்தவர்கள்	0	5
விஷக் கன்னிகை	0	6
வரலக்ஷிமியின் காதல்	0	5
காதலன்	0	4
யார் இந்த ம. பொ. சி.	0	4
குத்தூசி	0	4
சுவாமிகாள்	0	4
ஹரே ராமா	0	4
கடவுள் களஞ்சியம்	0	4
திருப்பதி மொட்டை	0	6
முதலாளித்தும் ஒழிக	0	12
இலட்சியவாதி அழகிரிசாமி	0	5
டால்ஸ்டாய் கதைகள்	0	10
துரோகி கப்லான்	0	4
இந்தி பொது மொழியா	0	8

பகுத்தறிவுப் பாசறை
147, பவழக்காரத் தெரு, சென்னை

Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras, Joint-Editor M. Ilancheliyan B. A. (Hons.)